உ

ஸ்ரீ பரமசிவன் துணை

மன்மதபூர்வகாண்டம்

என்னும்

ரதிமன்மதன்
தர்க்க ஒப்பாரி

இந்நூல்
பல ஓலைச்சுவடிகளிலிருந்தும், பல ஆகமபுராணங்களைக்
கொண்டும் எழுதப்பெற்றது
இயற்றியவர்
குடந்தைமா நகரம்
M. நாராயணசாமி பிள்ளை
கும்பகோணம்
புத்தக வியாபாரம்
R. சீனிவாச நாயுடு அவர்கள்
விருப்பத்தின்படி வெளியிடப்பட்டது

சண்முகானந்த புத்தகசாலை,
48, நைனியப்ப நாய்க்கன் தெரு,
பார்க்டவுன், சென்னை-600003

காபிரைட்] [விலை ரூ. 1-50

விளம்பரம்

அறிவிற் சிறந்த அன்பர்களே! இப்பூவுலகில் அங்கஜனாகிய மன்மதன் பண்டிகையை ஆவலாய் கொண்டாடுகிறவர்களுக்கு சிவபெருமானால் செய்தருளிய அநேகம் திருவிளையாடல்களில் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்து தேவர்களுக்குக் காக்ஷிதந்த மன்மதன் உற்சவத்தை வருஷத்திற்கொருமுறை மாசிமாதம் அமாவாசை கழித்த மூன்றாம் நாள் வழக்கம்போல் மன்மதஸ்தாபனம் செய்யுமிடத்தில் தண்ணீர் தெளித்து மாவிலை தோரணங்கள் கட்டி சுத்தமான இடத்திலிருக்கும் ஆமணக்கு பொழியும் கொட்டைதளி தெர்பைமாவிலை புட்பகந்தம் சாத்தி புரோகிதரை கொண்டு மன்மதஸ்தாபனம் செய்து மறுதினம் முதல் ஒவ்வொரு தினமும் அவரவர்களாலியன்ற வரையில் கனிவர்க்கம் முதலிய தூபதீபம் கொடுத்து பிரதிதினமும் இப்புஸ்தகத்தை வாசித்து வந்து அடுத்த பௌர்ணமி அன்றைய தினம் மன்மத தகனம் வரையில் வாசித்து நிறுத்திடவும் மூன்றாம்நாள் லிங்க பூஜைக்கு பலவித பக்ஷணங்களும் பாயசம் பானகம் முதலிய நீர்மோர்யாவற்றையும் வைத்து இந்த புஸ்தகத்தை வாசித்து முடிவுசெய்து மன்மதனை யெழுப்பினாலும் தேவர்கள் முனிவர்களுக்கு அனுக்கிரகம் செய்தருளிய இந்த மன்மதன் சரித்திரத்தை முடித்து யாவர்களும் பேரானந்தமடைந்து சுகமாய் வாழ்ந்திருப்பார்களென்று சிவபிரான் திருவருளை ஸ்துதி செய்கிறேன் ஸ்ரீமன் நாராயணனுடைய அனுக்கிரகமும் உண்டாகும்.

சுபம்!

உ

ஸ்ரீ பரமசிவன் துணை

மன்மத பூர்வகாண்டம் என்னும்

ரதிமன்மத தர்க்க ஒப்பாரி

(வேழமுகன் துதி விருத்தம்)

ஆதிகணபதியே ஐங்கரக் கணபதியே அருள் நிறைந்த
சோதிக்கணபதியே சுடரே சுடரொளியே துயரகற்றும்
நீதிக்கணபதியே நிமலக் கணபதியே நெடுமதன் சரிதை
ஓதக் கணபதியே வரமருள் குணநிதியே வந்தெனக்கே

(மூவடி வெண் செந்துறை)

முந்தி யுதித்தவனே முக்கண் சிவன் மகனே
நந்தி முகத்தவனே தற்பரி தபோபலனே
சித்திபுத்தி நாயகனே சீதரன் மருமகனே
முத்திக்கு முதல்வனே மூவர்க்கும் மூத்தவனே
சத்ரு சம்மாரணனே சதிமாரன் கதையதனை
முத்தமிழா லோதவுனை முனைந்தே பணிந்தேனே
கமலா சனத்தாளே காருந்தன் மருமகளே
கரத்தில் வீணையுடைய கல்விக்கரசியரே
நிமலன் தபசழித்த நெடுமாரன் வில்கதையை
தமிழ்ச்சீர் தவருமல் தாயே வரமருளே
சீரியே னுரைத்தகவி சீர்பிழையிருந்தாலும்
பெரிதாக பாராமல் பாதுகார் சரஸ்வதியே
ஆதியிலே பூதலத்தில் அருள் நிறைந்த சக்தியினுல்
நீதியாய் மூவர்களும் நீநிலத்தி லவதரித்தார்
அவதரித்த மூவர்களில் அயன் படைப்புத் தொழில் புரிய

சிவனார் வரமளிக்க ஸ்யாமளன் காதலிக்க
மூவர் பிறந்துலகில் முளைந்து நிதிபுரிய
பூமாரனார் பிறந்த புதுமை யுரைப்பேனதி-ய—
கரியமாலும் ஒரு நாள் கங்காளனை நோக்கி
பரிவாய் தவமிருக்க பரமன் எதிராகி
எதற்கு எனைநோக்கி இருந்தீர் தபசெனவே
சுதனென்று வேணுமென்று ஸ்யாமளன் கூறிடவே
தர்பைதனை எடுத்து தற்பரனுத்தருணம்
கர்ப்பலையா யுண்டு செய்தார் காமவேளை யச்சமயம்
மைந்தனை பிறக்கச்செய்து மறைந்தார் மஹாதேவன்
சிந்தைகளித்து மதனை செங்கண்மால் வளர்த்து வந்தார்
மன்மத வாண்டினிலே மாசிப்பிறைதனிலே
கண்யமதன் பிறந்தான் க்ரேதாயுகத்தினிலே
துன்மதி வருடமதில் தேவசுரர் பார்க்கடலில்
அன்பாய் அமிர்தம் கடைய அவதரித்தாள் ரதி விரைவில்
மதன் ரதி இருவருக்கும் மகமேரு பர்வதத்தில்
இதமுடன் மணமுடித்தே அளித்தனரே சீதனங்கள்
தென்றல்தேர் பெண்கள்படை சத்திரவட்டகுடை
கண்மூன்றுடைய சிவன் களித்தளித்தாரின்பவிடை
மசசக்கொடிவிருது மங்கையுமையளித்தாள்
மெச்சு மாரோக்யநகர் மாமரை வாணி தந்தாள்
இருள்யானை கொடிமுரசு எம்பெருமானளித்தார்
பரமன் பஞ்சபாணம் பறக்ககிளி வாணிதந்தாள்
இத்தனையுங் கொடுத்து இன்பரதி மாரனுக்கு
உத்திரவு கொடுத்தார் உள்ளன்பளிப்பதற்கு
சதிபதி சல்லாபமுடன் சையோகங் கொண்டிடவும்
ரதிமாரனை யழைத்து நடந்தனரே மூவர்களும்
ஆதிகயிலாயத்திலே அம்பிகையின் பாகத்திலே
பூதகணங்கள் சூழ பூதநாத னிருக்கையிலே
தற்பரியை ஈன்றெடுத்த தக்கனவனொரு நாள்
சிற்பரனை காணுதற்கு சிறப்புடனே யங்குவந்தான்.

மாமனு சென்றுசிவன் மதியாதிருந்தாரே
கோமானும் தக்கன் கண்டு கொடுங்கோபங்கொண்டானே
மீசை துடிக்குதுபார் முன்கோபமாகுதுபார்
பேச்சு தடுமாறுதுபார் பித்தகனை சீறுதுபார்
அவ்வலரி கண்கள் ரெண்டும் செவ்வலரி பூத்திடவே
கொவ்வைக்கனிபோல் மனது கொதித்து தணலாகிவிடவே
ஆர்கரித்து பற்கடித்து அதிககோபங் கொண்டானே
பார்த்தும் மதியாதிருந்த பரமனை சினந்தானே
பரமனைமாய்த்திடவே பார்மன்னன் எண்ணங்கொண்டான்
கோரமுடன் யாகமொன்று கோபமுடன் செய்யலுற்றுன்
தக்கனிட யாகத்திற்கு தேவர்முதல் சென்றிருந்தார்
தக்கன் தவிர பல முனிவர்களு மங்கிருந்தார்
தந்தைசெய்யும் யாகமதை தான்காண தற்பரியாள்
விந்தையுடன் நாதனையே வணங்கிட விடை கேட்கலுற்றுள்
விடைபெற்று விமலனிடம் வேகமாய் நடந்தாளே
அடைந்தனளே தக்கன்மனை யாகமதை கண்டாளே
ஈஸ்வரியை கண்ட தக்கன் ஈசனை தூஷித்திடவே
வேஷ்டைகொண்டு தாயிடத்தே விமலியவள் சென்றிடவே
பேசாதிருந்தானே பெற்றெடுத்த தாயவளும்
மோசக்கருத்து கொண்ட மூடர்களை பார்த்துமையும்
தந்தையோ யெந்தனுக்கு சத்ராதி நீயல்லவோ
சந்திர சேகரனை சாகச்செய்யும் யாகமிதோ
உன்வேள் வியழியவேணும் வெட்டுண்டு நீசாகவேணும்
தோல்வி பெற்று யாகசாலை சுடலைகாடாகவேணும்
சண்டாளா என்தேகம் தனலாயெரியுது பார்
என்று சொல்லி யாகத்திலே ஈஸ்வரி குதித்திறந்தாள்
எத்திக்கிலும் புகழும் இனியமலையரசன்
புத்திரப்பேரில்லாமல் பெருந்தபசுதான் புரிந்தான்
மலையரசன் தேவியவள் மேனுதேவி வயிற்றில்
மாது உமையவளும் மகளாய் அவதரித்தாள்
பிறந்து வளர்ந்தாளே பருவபக்குவ மடைந்தாள்

தெரிந்தே பலகலைகள் திரமாய் வளர்த்திருந்தாள்
யாகமதை பார்க்கசென்ற அம்பிகை வாராததினால்
யோகமதில் கண்டறிந்தே ஈசன் திகைத்ததினால்
நந்திமுகனை யழைத்து தக்கனை வதைத்துவர
சந்திரசேகரனும் அனுப்பினார் சித்திபுயற
பெருச்சாளி வாகனத்தில் பேழைவயிற்றோனும் வந்தார்
பொரிகடலை யுண்டைவடை வழிதனிலே நின்றமர்ந்தார்
ஐங்கரனை காணோமென்று ஆறுமுகனை யழைத்தார்
மங்களமாய் சென்றுவர மஹேஸ்வரன் விடையளித்தார்
புள்ளிமயிலேறி புறப்பட்டு வேல்முருகன்
துள்ளியே தக்கனிடம் சென்றனரே கோபமுடன்
யாகசாலையருகே தோகையர்கள் நடனமிட
மோகங்கொண்டு நின்றுவிட்டார் மயிலோன் மனம்வாட
சங்கதி முற்றும் சிவன் ஞானதிருஷ்டியிலிருந்தே
ஓங்கார கோபமுடன் வியர்வை வழித்தெறிந்தார்
வியர்வை நிலத்தில்விழ வீரபத்திரர் பிறந்தார்
ஆயிரம் சிரசுடனே அரசனைப்பணிந்து நின்றார்
எதற்காக எனைபடைத்தீர் ஈசரே உந்தனுக்கு
அதமம் செய்த பாதகரை அறிவிப்பீ ரெந்தனுக்கு
அகோர வீரபத்திரனே அடங்காத சேவகனே
மகாயாகம் செய்யும் தக்கன் மமதை யடைந்தனே
யாகமதை கலைத்து அவனை கிழித்தெறிந்து
வேகமாய் வாருமென்று விடையளித்தார் அணிந்து
கோபங்கொண்டு வீரபத்திரர் கொக்கரித்து பற்கடித்து
தீபற்றி எரிவதுபோல் தக்கன் சபையடுத்து
ஓங்கார சப்தமிட்டு ஓடோடி வந்தாரே
தூக்கி கிழித்தாரே துண்டு ரெண்டாய் செய்தாரே
மற்றுமவன் மரபினரை மடித்து வதைத்தாரே
தற்பரனிடத்தில் வந்து சங்கதி யுரைத்தாரே
மங்கையுமை மாய்த்தபின்பு மஹேஸ்வரனேமுந்திருந்தார்

தங்குதடையில்லாமல் தவம்புரியவே துணிந்தார்
இமயமலைச்சாரலிலே ஈசான்யமூலையிலே|
கமழும் தவம்புரிந்தார் கடவுளு மவ்வேளையிலே
ஈசன்புரியும் தவம் ஈரேழு புவனமெல்லாம்
வீசுதுபார் ஜ்வாலைகொண்டு விண்ணவருலகமெல்லாம்
சகிக்க முடியாமல் தத்தளித்தார் தேவரெல்லாம்
பகீரவன் தபநிலையால் பயந்த துலகமெல்லாம்
இமையவர்கள் கூடியொன்ருய் இந்திரனை கண்டாரே
உமைபங்கன் யோகநிலை யுபத்திரம் விண்பாரே
தேவர்கள் வேண்டுதலை தேவேந்திரன் கேட்டறிந்து
தீவிரமாய் பரமன் தவலோகத்தைக் குறித்து
யோசித்துணர்ந்தானே உபாயமென்ரறிந்தானே
ஈசன் தபநிலையை யழிக்கத்துணிந்தானே
யாரை கொண்டருத்திடலாம் ஆதிசிவன் யோகமேதான்
என்று சீராகவே யுணர்ந்து தீவிரமாய் ஏதுரைப்பான்
தேவர் முனிவர்களே சித்தர்களே முத்தர்களே
ஆவலுடன் கூறுமெந்தன் ஆலோசனை கேளுங்களே
தக்கன் தபசழிக்க நம்மாலே யாகாது
இக்கணமே மன்மதற்கு எழுதிடுவோம் தூது
மன்மதன் மனதுவைத்தால் மாதவம் கலைத்திடுவான்
துன்பத்தை தீர்த்திடுவான் துயரகல கார்த்திடுவான்
என்று லிகிதம்வரைந்தானே நீலமேகன் மைந்தனுக்கு
வருத்த குறையொழிய வாமனன் குமாரனுக்கு
சேவரை யழைத்து சிமிலோலை கைகொடுத்தான்
தேவிரதி மாரனிடம் தந்திடுங்க ளென்றுரைத்தாள்
ஓலையெழுதியதை உலகளந்தோன் தானறிந்தார்
மேலும் மனம் தளார்ந்து மேகவர்ணனேது செய்தார்
மைந்தனுக்கு தீங்குவந்து மூண்டதென எம்பெருமாள்
அந்தமிலும் லக்ஷிமி அழைத்துவரும் ஏதுசொம்வார்
பார்த்தனையோ லக்ஷிமியே புரந்தான் செய்சதிவை

சீர்மாரனை வதைக்க சித்துள்ள செய்தியதை
அம்புலியோன் யோகமதில் ஆதிக்கமாயிருக்க
தம்மகனை தேவரெல்லாம் தக்கனுக்கு பலிகொடுக்க
யோசனை செய்தார்காண் உத்தமியே லக்ஷிமியே
மோசம் வந்துமூண்டதடி மைந்தனுக்கு இத்தினியே
கங்காளனின் துபசை கெடுக்க யாரால் முடியும்
தங்காமல் யானேகி தடுப்பேன் விடையளியும்
என்று விடைபெற்றெழுந்தாரே வேகமாய் மாயவரும்
தடைபடிக்க மன்மதனை தனித்து வாராரவரும்
வைகுந்தத்திற்கடுத்த மண்டபததில் வந்துநின்று
செய்வது என்னவென்று தீர்க்கமாய் யோசித்து
உற்று நினைத்தாரே ஒருகோடி யோசனையை
சற்று மனத்தெளிந்து சமாளித்தார் தன்மதியை
என்னவேடங் கொள்ளலாமென்றார் எம்பெருமான் மாயவரும்
ஒருவனக் குறத்தியைப்போல் வடிவங் கொண்டாரவரும்
சன்னல் பின்னல் தாவடமாம சங்குமணி மாலைகளாம்
மின்னும் சரப்பளியாம் மேறகாதில் கொப்புகளாம்
அக்குமணி கொக்குமணி அழகுடனே தானணிந்தாள்
சிக்கறுத்து கூந்தலதை சிமிழ்போல கொண்டையிட்டாள்
கொண்டைக்கழகாக கலிக்கத்துவசரவமைத்தாள்
தண்டை கொலுசணிந்தாள் தங்கவளையல் தரித்தாள்
குடமல்லி குண்டுமல்லி கொண்டையில் செருகலுற்றாள்
இடையிலே ஒட்டியாணம் இனிதாய் பிகுவெடுத்தாள்
குறக்கூடை இடுப்பில் வைத்து கோகிலத்தைப்போல்
(தெளிந்து

பிறப்பங்கோல் கைபிடித்து வாரான் வழிநடந்து
காடு செடி கடந்தாள் காணாறு பொய்கை விட்டாள்
மேடுபள்ளம் தாண்டி வந்தாள் மேனகைபோல் நடந்தாள்
சிங்கம் புலி சீறும் வனம் சிறுத்தை விளையாடும் வனம்
எங்கும் நரி கரடி இருக்கும் கொடிய வனம்
காரோங்கும் வனங்கடந்து கால்நடையாக நடந்து

ஆரோக்யபுரம் நோக்கி அரிவை வாராள் தொடர்ந்து
இரதிதேவியாள் தனக்கு நல்லகுறியுரைத்து
உரமாரனை தடுக்க ஒயிலாய் வாராள் தடுத்து
சடையாம் கடைத்தெருவாம் கன்னூர வீதிகளாம்

கொடியிடையாள் தாண்டியல்லோ குறமுறைக்கவாரானாம்
ஆரியர் வீதிவிட்டாள் அரசர் தெருக்கடந்தாள்
கூறியேமருத்துவகை கொடுத்து வாராயிகுளிகை

(கு ற ம்)

தின தந்திகு தின தந்திகு தின தந்திகு தினகு தின தந்திகு
(தினகு

தென்குதி நா திநன்கு தின தந்திகு தினகு (தி)
பச்சைமணி பாலமணி வாங்கலையோ அம்மே

மேச்சம் நல்ல பவளமணி வாங்கலையோ அம்மே

ஆண்வசியம் பெண்வசியம் அடியேனிடம் உண்டு அம்மே

கூன் குருடர் செவிடருக்கு குளிகை பல உண்டு

நரிபல்லு கோரோஜனை கஸ்தூரி யுண்டு அம் மே க

மரித்தவரை எழுப்புதற்கு மருந்து வகை யுண்டு

கொடியக்கயர் ஏணைகயர் குணப்படிச்சியுண்டு அம் மே கு

கடிவிஷங்க ளிறங்குதற்கு தைலவகை யுண்டு

முத்திழைத்த கூடையிலே மூலிகைகள் உண்டி அம்மே மு

வைத்த பில்லி சூனியங்கள் திருப்ப வழியுண்டு

கருத்தரிக்கா பேர்களுக்கு கர்ப்ப மூலிகையுண்டு அம்மேக

வருத்தும்பல ரோகத்திற்கும் வனமூலிகை யுண்டு

யானைத்தோல் அரனை நாக்கு முதலைவாலுமுண்டு அம்மே மு

ஆனுவ ஐங்கோலமையும் அடியாளிடமுண்டு
கருவெடுப்பேன் குறியுரைப்பேன் கைரேகை பார்ப்பேன்
(அம்மே கை

பொருத்த நிமித்த மில்லா பேர்களையே சேர்ப்பேன்

வேண்டியவர் சீக்கிரமாய் வாங்களடியம்மே வா
ஆண்டவனருளிக்க அனுவசையா நம்மே

(வெண் செந்துறை)

தெந்தினப்பாட்டுப்பாடி தெருவீதி வாராளே
வைகுந்தன் மருமகளின் வருத்தந்தீர்க்க வாராளே
அன்னேர வேலையிலே ஆரணங்கு மேல்ரதியாய்
உண்டுபசியாறி உறங்கினல் மஞ்சமதில்
கண்ணயர்ந்த பிறகு சண்ணடாளதிசயமே
அண்டமலவளும் ஆகாத சொர்ப்பனமே

சொர்பனங்கள் கண்டவளும் திடுக்கிட்டெழுந்தாளே
தற்பரனே நினைத்து சதுராய் பணிந்தாளே
அப்பொது பூங்குறத்தி அவ்வீதி வாராளே
ஒப்பில்லா குறத்தியரின் ஒலிதனையே கேட்டாளே

தாதிகளா தோழிகளா தையலரே வாங்களடி
மாதொருத்தி வீதிவழி மருந்து விற்று வாராளடி
மருந்துவற்றும் குறத்தியரை யாதரவா யழையுங்கடி
சிறது குறிகேட்டு நாம் சித்தங்களிப்போமடி

இரதியின் மொழிகேட்டு நங்கையர்கள் ஓடிவந்தார்
குறத்தியருகில் வந்து கூவியழைக்கலுற்றார்
கோதை குறத்தியரும் குலுங்கி நடைநடந்தாள்
சீதன முகங்குளிற சிரித்து மனைக்குள் வந்தாள்

வந்த குறத்தியர்க்கு வட்டமனை போட்டார்கள்
குந்தும் குறத்தியென்று கொம்பனைக் குறைந்தார்கள்
குறக்கூடை கீழ் வைத்து கையில் பிரம்பைப் பிடித்து
ஒருகால் தனை மடித்து உட்கார்ந்தாளே சுளித்து

கானக்குறத்தியரே கைபார்க்க தெரியுமோடி
மானே தெரிந்திருந்தால் மறையாதுறையுமோடி
உறைக்கின்றேன் கேள் தாயே உத்தமியே மயிலே
குறை ஒன்றுமில்லாமல் கூறுவேன் கேள்தையலே

(குறம்)

உலகினில் பலாபலன்கள் வேணதுண்டு அம்மே வே
உரைத்திடுவேன் சிலதுனக்கு ஊக்கமாய் கேளம்மே
இடது புரம் ஆண்களுக்கு துடித்திடிலே தாயே து
எதிரில்லா மைந்தனென்று பிறக்கு மறிவாயே

வலது பக்கம் பெண்களுக்கு வையகத்தில் துடித்தால் வை
வருத்தமெத்த வருமடி ஆளினிட குணத்தால்
புருடருக்கு இடதுபக்கம் பூவையரே துடித்தால் பூ
பூலோக வாழ்க்கை விட்டு பொன்னுலகமடைவார்

ஆண்களுக்கு வலது பக்கம் ஆரணங்கே துடித்தால் ஆ
ஐஸ்வர்யம் மெத்தவுண்டு அவனியையுமாள்வார்
துடி நூல் முறைகளின்னும் வேணதுண்டு அம்மே வே
துன்பமொன்றும் அனுவாது உந்தனுக்கு அம்மே

(வெண்செந்துறை)

போகட்டும் குறத்தியரே புதுமையுள்ள பொற்கொடியே
ஏகபோக மயிலே உன் இருப்பிடத்தை கூரடியே

அந்த மொழி கேட்டு அருங்குறத்தி ஏது சொல்வாள்
விந்தைமிகுங் குயில்போல் வாய்திறந்துவைத்திடுவாள்

நான் பிறந்து வளர்ந்த நாடதனை கேளுமம்மே
தேன்மொழி களித்திடவே தெரிவிப்பேன் என்நாடு கன்னே

(குறம்)

வெந்தனது நாடுதனை கேட்க வந்தாயம்மே
விருப்பிடத்தை சொல்லுகிறேன் விருப்பமுடன் கேளும்

ஆதி அந்த கயிலாசனைதருளாலே
ஐங்கரநார் தன்னருளாலம்மையுமை யருளால்

இன்னாடுயெங்களது தென்னாடு அம்மே
இந்திரரும் சூரியருமுனக்கு மெங்கள் நாடு

சூரியரும் சந்திரரும் சூழ்ந்திருக்கும் நாடு
சுத்தமுள்ள பெரியோர்கள் தவம் புரியும் நாடு
அந்தணர்கள் வேதியர்கள் அருந்தவத்து முனிவர்
அனைவோரும் யெப்பொழுதும் தவம்புரியும் நாடு

மந்திரங்கள் சாஸ்திரங்கள் மறையோதும் நாடு
மறவாமல் மூவரையும் துதிக்கும் மெங்கள் நாடு
யீரேழுபதி நாலு லோகமெல்லாம் நாங்கள்
யெப்போதும் மரசாள்வோ மினையொருவரில்லை

தப்பாமல் எங்களது சீமைதனில் அம்மே
தவருது ஒருநாளும் பஞ்சமது இல்லை
அக்ஷயத்தாலன்னமது ஆயிரம் போக்கிடுவோம்
ஆதிகயிலாச சிவசங்கர நா ருளால்

மந்திரத்தால் மாங்கனிகள் பரிப்ப மடியம்மே
பச்சமலை குடியிருக்கும் பழங்களது பரிப்போம்
பசிகாலமானலோ பட்டணத்தில் திரிவோம்
கொச்சிமலை குடியிருந்து கோவைபழம் பரிப்போம்

குளிர்காலமானலோ குரியுரைக்க வருவோம்
யெங்கள் குலம் ருஜகுலம் குரக்கூட்டமல்ல
யெழிலான குடிசையிலே குடியிருப்போம் அம்மே

யெண்டிருந்த தேசமெல்லாம பிள்ளையொன்று மரிவோம்
பெரு நெருப்பை தீண்டாத சாதியடி நாங்கள்

வேறு

அந்த உறைக்கேட்டு அழகுரதிக்கிளியால்
பூங்குறத்தி யெந்தனுக்கு புகழ்ந்து குறிசொன்னலோ
யெந்தன் மனக்குறையை இங்கெடுத்து மொழியுமென்றன
உள்ள குறியுரைத்தால் உத்தமியே எந்தனுக்கு
நல்ல குறியுரைத்தால் நான் தருவேன் ரெத்தினங்கள்
அந்த உறைகேட்டு அழகான கட்டுவச்சி

குறம்

சாண்ணியது தானெடுத்து சதுரமாக மொழுகி
சட்டமாக பிள்ளையாரை பிடித்துமங்கே வைத்து

அழருடனே துன்பையதை அவர்சிரசில் சாத்தி
அருமையுள்ள கனிவகைகள் கொண்டு வந்து வைத்து
பச்சரிசியும் தேங்காயும் பயருடனே பாலும்
இச்சையுடன் தான்படைத்து தூபதீபம் கொடுத்தாள்

ஓங்கள் குலதெய்வங்களை உகந்து போற்றுமம்மே
ஓன் வீட்டு பூவாடைக்காரியையும் நினைப்பாய்
சிந்தையிலும் தியானம் பண்ணிவந்தமரும் அம்மே
திரமாக ஒந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ

யெங்கள் குல தெய்வங்களை நானினைத்து அம்மே
இத்தருண மூந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
அங்காள அம்மன் சத்தி அனைவோரும் வாருங்கள்
ஆகாசவாணி துர்க்கை அய்யனூர் பிடாரி

அலைகடலில் வாழுகின்ற கன்னிகளும்
அய்ந்து முனிக்கிளைய முனி மன்னுருசாமி
யெல்லோரும் வந்து குறக்கூடை தனிலமரும்
பச்சமலை தாயாரும் பரிவுடனே வந்து

பாவாடைருயனுமே வந்தமருமிங்கே
தெய்வங்களை நினைத்தாலோ சிலுக்குமதுடம்பை அம்மே
தேன்மொழியே உந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
குரக்கோலை கையிலெடுத்து கொம்பனையாள் தானும்

குறியுரைக்கும் வேளையிலே குலுக்கென நகைத்தாளே
காணுத அதிசயங்கள் காட்டுதடி அம்மே
கந்தருந்தன் தமயனென்று சொல்லுதடியம்மே
மாயவனுருந்தனுக்கு மாமனாக வேணும்

மயூரதே வருந்தனுக்கு தகப்பனடி யம்மே
பார்வதியாளுந்தனுக்கு தாயாகவேணும்
பரமசிவன் பெற்றெடுத்த பைங்கிளிதான் நீயும்
மகரக் கொடி தான் படைத்த மன்மதநாருனக்கு

மங்குகிலியம் தரித்தாரென்று சொல்லுதடியம்மே
பொய்யென்றும் மெய்யென்றும் புரிந்ததுவோ உனக்கு
புகன்றிடுவேன்யென் வார்த்தைக் கேளடி அம்மே

உன்பாட்டன் தற்கனவனுக்கந்து வேள்வி செய்தான்
உமையவளும் யீஸ்பரரை உத்திரவு கேட்டு,
உகந்து அந்த தற்கனிடம் வந்து நின்றுளப்போ
வந்துநின்ற பார்வதியை மதிக்கவில்லை யவனும்
மங்கையரும் கோபங்கொண்டு மனம்வெறுத்து அப்போ
அக்கினியில் தாம்விழுந்து அவளுயிரை விடுத்தாள்
யீஸ்பரியும் முன் தாயுமிரந்து விட்டாளம்மே
பின்பமுடன் மலைக்குறத்தி யெடுத்துறைத்தாளப்போ

வேறு

அப்போ றதி கினியாளாரணங்கு யேது சொல்வான்
யென்தாயே யீஸ்பரியேயென்று சொல்லிதானவளும்
அடித்து விழுந்தழுதாள் ஆதிசிவன் தன்மகளும்
அப்பொழுது தாதியர்களனைவோரும் ஓடிவந்து
வாரியெடுத்து மார்போடே தானணைத்து
உட்காருமென்று உபசாரவார்த்தை சொல்லி
தண்ணீரும் பன்னீருதான் தெளித்து உபசரித்து
சாமரங்களால் விசிறி தாதியர்கள் சூழ்ந்திருக்க
தன்னுடைய கண்திறந்து தாதியரை பார்க்கலுற்றாள்
வந்தகுறத்தி இன்னும் வரிசையுடன் சொல்லுமென்றாள்
வரிசையுடன் குறத்திக்கு வண்மையாய் சொல்லலுற்றாள்
சமயமிது நல்லதென்று ரதியாள் சரிவரவே சொல்லுமென்றாள்
சடபிரமாய் ரதியவளும் கும்பிட்டடி பணிந்து

குறம்

நெல்விரையை தான்பரப்பி நேர்ந்த குறியுறைக்க
நீலகண்டனுமையவளே வாக்கருளு மென்பாள்
காஞ்சி நகர்தனில் வாழும் காமாக்ஷி உமையே
கன்னியற்கு குறியுரைக்க வாக்கருளுமென்பாள்
பச்சைமலை தாயாரே வாக்கருளு மென்பாள்

பரமசிவன் ஒன் தகப்பன் அருந்தபசு செய்வார்
அவர் தபசை தானளிக்க அமரர்களும் இப்போ

தேவேந்திர மகாராஜன் திருமுகமுமெழுதி
தெரிவிக்கவே தூதர்களை அனுப்புவாரே யம்மே

ஒன்புருஷன் மன்மதற்கு ஓலைவருதிப்போ
ஓலைகண்ட தக்ஷணத்திலுகந்து செல்வாரம்மே

வேள் மதனுரிப்போது வேகமுடன் சென்று
வேணி அரன்மேல் பாணம் விட்டிடவே போருர்

யீஸ்பரநார் கோபங்கொண்டு யெரித்துவிட போருர்
யீஸ்பரியே யெங்கள் சொல்லு ரதியம்மே
யென்றுசொல்லி தானவளு மெடுத்துரைத்தாளப்போ

வேறு

அப்போது ரதிகிளியாளாரணங்குயேது செய்தான்
அருகிருந்த தாதிகளை அன்பாக தானழைத்து
பொன்னுலே ஆடைகளும் பூஷணங்கள் வெகுவாக
மலைக்குறத்தியற்கு வரிசையுடன் தான்கொடென்ருன்
தங்கைதனை யெடுத்து மங்களமாய் தான்கொடுத்து
சாற்றிமலை குறத்தி போற்றி நடந்த பின்பு,
அந்தபுரம் சேர்ந்து சிந்தையுற்று தானினைந்தான்
அப்போது தூதர்களும் அன்பாக யேது சொல்வார்
இவ்வனத்தில் தாமிரந்தாளிந்திரன் முன் போவதில்லை
மதிமோசம் வந்துவிடும் வனந்தாண்டி போவதென்ருல்
காமவனந்தாண்டிவிட்டால் கடந்தே தரிப் போவோமென்ருர்
இந்தபடியாக தூதர்கள் இனி நடக்கும் வேளையிலே
அங்கே மயில்களும் குயில்களும் மருவி விளையாடுவதும்
வக்காவும் தாருவும் ஒக்கவிளையாடுறதும்
அன்னங்களெல்லாம் அமர்ந்து இசைபாடுவதும்
தானத்தான் பிள்ளை நயனங்கள் பாடுவதும்
பச்சை கிளிகள் வந்து மெச்சி விளையாடுரதும்

பஞ்சவர்ணகிளிகள் வந்து கொஞ்சிவிளையாடுரதும்
ஐவ்வாது பூனைகள் தனித்து விளையாடுரதும்
காமவனந்தனிலே கனிவாசம் வீசுரதும்
வேரில் பழுத்து வெடித்தப் பலாபழமும்
கொம்பில் பழுத்த கோதுமடா மாங்கனியும்
வாழைப்பழங்கள் வளைந்து குலேசாய்கிறதும்
காம வனத்திலுள்ள கனிவர்க்கமத்தனையும்
இன்னதென்று கண்டறிய யெவருலுமாகாது
வனத்தில் திருக்குளமும் மாளிகையும் கண்டார்கள்
திருக்குளத்தை சுற்றி செங்கழுநீர் வாசமதும்
குளத்தினழகை கண்டு கூடி நின்று பார்த்திருந்தார்
நாலு படித்துறையும் நவரெத்தின மாளிகையும்
பூசைக்கு ஓர் துரையும் போசனத்துக்கு ஓர் துரையும்
ரதிதேவி நாயகிக்கி தலமான ஒரு துரையும்
காதிமார் பெண்களுக்குத் தனியே ஒரு துரையும்
நாலு துரையும் நவரெதத்ன மாளிகையும்
இருவரும் சோந்துருக்கும்வ காந்த மேடைகளும்
உப்பரிகை அதிசயதனை உரைக்க முடிபோகாது
காமவெறியெடுத்து தூதர்கள் கலங்கி நின்று போகையிலே
மன்மதவெறியெடுத்து மயங்கினர் தூதர்களும்
இந்திரன் தன் வனமும் இதற்கு நிகரில்லே யென்ருர்
வைகுந்தத்திற்கு மதிப்பல்ல வென்றுரைத்தார்
கயிலாசத்துக்கிதனே கணக்கிடவும் முடியாது
வனத்தை விட்டு வந்தார்கள் வகையாக தூதர்களும்
மன்மதனர் அரண்மனைக்கி மகிழ்ச்சியாகவந்தார்கள்
வாசல் அதிக்காரர் வழிமறித்தார் தூதர்களை
ஆருடைய தூதரென்று அவசரமாய் கேட்டார்கள்
யெவருடைய தூதரென்று பியம்பிடுவீர்யென்ருர்கள்
இந்த படியாய் காவலர்கள் இனிகேட்கும் வேளையிலே
அப்போது தூதர்களுமன்பாக பேது சொல்வார்

இந்திரலோகமிருந்து இங்கே வந்தோம் தூதர்களும்
தெய்வசபையை விட்டு தேடி வந்தோ மன்மதனை
இந்திரு மன்மதனை இன்பமுடன் கொண்டாடி
தேவர்கள் யெல்லோரும் தீர்க்கமுடன் யோசித்து
ஆயிரங்கண்ணுடையாரழைத்து வர சொன்னார் காண்
ஆனதினால் நாங்களன்புடனே வந்தோமிங்கே
தூதர்கள் வந்தோமென்றுங்கள் துரைக்கிநீர் சொல்லுங்கபோ
தூதர் சொன்ன மொழியை துருசாக்கேட்டெழுந்து
ஒட்டம் நடையாக ஓடி வந்தார் தூதர்களும்
ரதியாளும் மன்மதனும நலமா இருக்கையிலே
அன்னமும் தாருவுமமர்த்து விளையாடயிலே
மயிலுங்குயிலும போல் மருவி விளையாடயிலே
சொக்கட்டானாடி சொகுசாயிருக்கையிலே
பந்தயங்கள் வைத்து பகடை விளையாடயிலே
வித்தைகளாக விளையாடி தானிருந்தார்
வந்ததொரு தூதர்களும வணங்கினார் மன்மதனை
வணங்கிநின்ற தூதர்களை மன்மதனும் தான்பார்த்து
வேற்க விருவக்க வேகமாய் வந்ததென்ன
அவசரமாய் வந்ததென்ன அன்புடனே சொல்லுமென்றார்
வந்ததொரு சேதிதன்னை வகைவிபரம் சொல்லுமென்றார்
இந்தபடியாய் மன்மதனு மினிகேட்கும் வேளையினில்
அப்போது தூதர்களும் அடிவணங்கியேது சொல்வார்
தெய்வலோக மிருந்தும்மை தெரிசிக்க வந்தோமென்றார்
ஆகையினாலே தங்கட்கரிக்கையிட வந்தோமென்றார்

சொல்லிவாய்மூடி தூதர்களும் நிற்கையிலே
முத்தான வாய்திறந்து மன்மதன் உத்திரமும் சொல்வாரே
இங்கே வந்த விபரமதை இயம்பிடுவீரெந்தனுக்கு
யென்றுசொல்லும் வேளையிலே யெழிலான மாளிகையில்

தூணுக்கு தூணு தூண்டா விளக்கெரிய
காலே விளக்கெரிய கைபந்தம் நின்றெரிய
வெள்ளி விளக்கெரிய விடிவிளக்குகளின்றெரிய
தங்கவிளக்கெரிய தாதிமார் சூழ்ந்திருக்க
குத்து விளக்கெரிய கோதையர்கள் சூழ்ந்திருக்க
கொத்து குளோப்பர்களும் சுற்றிலுமே னின்றெரிய
வேடிக்கைபார்த்து தூதர்கள் விருப்பமுடன் நிற்கையிலே
தங்கடியோரம் தங்கி நின்ருர் தூதர்களும்
மன்மதனைக்கண்டு மகிழ்ச்சியாய் னின்ருர்கள்
வடிவில் மிகுந்த வரிசையுள்ள மன்மதரே
மங்கையநுளால் வந்தோம் மாயன் மகனுரே
மாயன்மகனுரே மன்மதனே தஞ்சமென்ருர்
ஆயன்மகனுரே ஆனழகா தஞ்சமென்ருர்
ருபத்தளகா ருக்குமணி புத்திரனே
அலமேலு மங்கைக்கி அருமையுள்ள புத்திரனே
மாயன்மகிழ வந்துதித்த புத்திரனே
திங்கள் குடைசூழ்ந்த சிவனர் மருமகனே
யெங்கள் குறைதீர்த்து யீடேற்றும் மன்மதனே
மன்மதரைகண்டு தூதர்கள் வருணித்து நின்ருர்கள்
வணங்கிநின்ற தூதர்களை மன்மதனும் தான்பார்த்து
ஆசனம் தான்கொடுத்து அருகிருக்க செய்தாரே
உட்காருமென்று சொல்லி உத்திரவுதான் கொடுத்தார்
மகாபாக்கியமென்று தூதர்கள் மகிழ்ந்து இருக்கையிலே
அடைகாயும் வெற்றிலையும் அன்புடனே தான் கொடுத்தார்
யெளியேனைத்தேடி யெங்கே வந்தீர் தூதர்களே
அடியேனை தேவர்கள் அன்பாய் நினைத்ததென்ன
தெய்வலோகத்திலிருந்து தேடிவந்த காரியமேன்
வந்ததொரு காரியத்தை வரிசையுடன் சொல்லுமென்ருர்
இந்தபடியாய் மன்மதருஜன் இனிகேட்கும் வேளையிலே
கேட்ட உடன் தூதர்களும் கெம்பீரமாகவே தான்
சொல்லுகிறேம் மன்மதரே துணைபுரியு மெங்களுக்கு

ஆயிரங்கண்ணாரும்மை அழைத்துவரச் சொன்னார்காண்
தெய்வசபையிலும்மை தேவர்களும் கொண்டாடி
கொண்டாடி பேர்பெற்ற கோவிந்தன் மகனுரே
சேவகத்திலும்மை தீரமென்று சொன்னார் காண்
அண்டத்திலும்மை அதிசூரனென்றார் காண்
மன்மதநார் வந்தார் மனக்கவலை தீருமென்றார்
ஆகையினல் நாகங்களனை வோருவந்மோசமய்யா
வாறுமென்று தூதர்கள் மன்றாடி நிற்கையிலே
போகாதேயிருந்தால் பிளைமோசம் வந்துவிடும்
யென்று சொல்லி மன்மதரும் யெழுந்திருந்தாரன் னேரம்
சலவை கல் மண்டபத்தில் சாமிமதன் வந்துநின்று
சம்பங்கியெண்ணெ கொண்டு தான்மழுகி மழிராற்றி
கோதிமயிரை கோணமல் சிக்கருத்து
வாரிமுடிந்து வரிசையுடன் மன்மதனும்
திருநாமமிட்டு திவ்வியபோஜனம் செய்து
சரியா நிஜாருமிட்டு ஜரிகையங்கி மேல் தரித்து
சப்த கஜம் நடுங்க மத்தாப்பு உடுபணிந்து
நவரெத்தின கச்சை நன்றாய் அரைக்கிசைத்து
ஜரிகை நிஜார் தரித்து வயிரக்கடுக்கனிட்டு
தனங்கோடி வயிரமுத்து யினமாக வைத்திழைத்து
சச்சுதா நந்த பாலர் பச்சைகல் மூநகுசீலன்
தரித்திட காதில் துனி உதித்தது சூர்யனொளி
தங்கபதக்கமதில் சிர் கமுகமெளுதிவைத்த
தகதகன மார்பிலங்க பகலவன்போல் துலங்க
தானே தளதளன பூனூல் பளபளென்ன
சத்திரபதி ராஜராஜன் முத்தாரம் மேல் பொஜன்
தரித்தார் புஜகிருதும் ஜொலிக்க ஜெகமுழுதும்
தஸ்த்தான கடயமிட்டார் முத்துவர்ணம் தொங்கவிட்டார்
தண்டலரமான விரகண்டாமணி யணிந்தார்
சந்திரயுகமிடையில் சுந்திரமாநுடையில்
சட்டமிருந்த பதிநெட்ட ாயுதமுமணிந்து

தவருமலே அனியபுவன மெல்லாம் பணிய
தப்பானமிருந்த அம்பூரு கூடணிந்தார்
சருவதகனமூத்து உருமாலை கைதரித்து
பத்சிறதிதானிலங்கசுத்திரை சிரங்குலுங்க
சலுதியிந் கண்ணாடியிலே திரும்பியவர் பார்க்கையிலே
தங்கமயமாயமைத்த திங்கலொளி மிருத்த
சத்திரபதிபா கெடுத்தார் முத்துசரம் தொங்கவிட்டார்
சத்திகலிக்கிறவிமுத்துரு சொருகிப் பெருகி
தலப்பாதலையில் வைத்து மலைப்பாகவே தரித்து
தன்னைதலை விட்டார் கண்ணாடியினில் பார்த்தார்
சரியவென்றுரைத்து வரிசையுடனே பார்த்து
சாத்த ஒன்றைது கட்டுமாத்து ஆயிரத்தெட்டு
தங்கத்திலிணைத்த சிங்கமுகம் மேல் பதித்த
சந்ருணசூரியனுற்ற நவரத்தினமிட்டிணைத்த
சாமிமதன் கீரீடமதை நேசமுகமாக அதை
தலையிலே அவர் தரிக்க நிலைக்கண்ணாடியை பார்க்க
சவ்வாசியென்று சொல்லி ஒவ்விபுரமீசை துள்ளி
சந்தோஷம் வந்துனன்னி மந்தகாசங்கள் பண்ணி
சந்வாபரணமெல்லாம் தான் தரித்து கொண்டார்காண்
கரும்பென்ற வில்லெடுத்து கையிலே தான்பிடித்தார்
தென்றல் தேர் தன்னை தெருவில் வரவழைத்தார்
ரதிதேவி தன்னிடத்தில் நலமாக வந்தார்காண்
நாயகனை கண்டவுடன் ரதிதேவி ஓடிவந்து
அலங்காரமேனுனக்கு ஆனழகா யென்சாமி
யென்றுசொல்லி ரதியாளு மினிகேட்கும் வேளையிலே
அப்போது மன்மதனும் ஆனழகனேது சொல்வார்
தெய்வலோகத்திலிருந்து தெரிவிக்க வந்தார்கள்
அதிரதனுமிந்திரனு மழைத்துவர சொன்னாரும்
ஆகையினால் நானுமவ்விடத்தில் போய்வாரேன்
போகவிடை தாடி பெண்மயிலே பெத்தனுக்கு

போக விடை கேட்ட புண்ணியனைத் தான் பார்த்து
யென்னவென்று சொனுகுறாள் யேந்திழையாளன்னேரம்
மன்மதனேயென் சாமியென் வார்த்தைதனை கேளுமென்றாள்
இந்தபயண மென்மனதுக் கேற்கவில்லை யென்றாளே
இது மோசப்பயணமென்று முன்பாக தோனுது
உங்கள் வாய்ச்சொல்லை கேட்டேன் மனது துடிக்கிறது
பதில் சொல்ல யெந்தனுக்கு வாயுங்குளறுகுது
யென்னிடை துகை துடிக்கிதிப்போ யென்னமோ தெரியலையே
வந்ததொரு தூதருக்கு பதில் சொல்லி தானனுப்பும்
பதில் சேதி வந்தவுடன் பயணம் வய்யும் யென்சாமி
இந்தப்படியா ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போது மன்மதனும் ஆனழகனேது செல்வார்
அல்லவே பெண்ணரசே அரணங்கே சொல்லுறேன் கேள்
தெய்வலோகந்தனிலே தேவர்களு மெல்லோரும்
பெருமாளுமிந்திரனும் பேறுண பிர்மாவும்
அனைவருமே கூடி அழைத்துவர சொன்னார்கள்
தாமதங்கள் சொல்ல தகுமோ காண் யெந்தனுக்கு
மும்மூர்த்தி உள்ள மட்டும் மோசம் வரப்போதில்லை
மகாவிஷ்ணு உள்ள மட்டும் மதிமோசம் வாராது
பெண்புத்தி பேதையென்று பேருலகில் சொல்வார்கள்
இந்தபடியாய் மன்மதனு மெடுத்துரைக்கும் வேளையினில்
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆனழகா சொல்லுகுறேன் :
பெண்புத்தியென்று பெருமையகம் சொல்லாதீர்
உந்தனை பெருமையுடன் உண்மையாய் தானழைத்தார்
உங்கள் பெருமையடக்கவல்லோ பிர்மாவும் தானழைத்தார்
உங்கள் இடுப்பை யடக்கவல்லோ ! இந்திரனும் தானழைத் [தார்
உங்கள் மதத்தையடக்கவல்லோமாயோனும் தானழைத்தார்
உங்கள் ஆண்மையடக்கவல்லோ அனைவரும் ! தானழைத்தார்

போகாதே யென் கணவா புண்ணியனே மோசம் வரும்
இந்தபடியாய் ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போது மன்மதரு மன்புடனே யேது யொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுரேன் கேள்
என் பெருமையை யடக்க பிர்மாவினாலாகுமோ தான்
யென் திருணி அடக்கினல் தேவர்களும் வாழ்வதுண்டோ
யென் இடுப்பையடக்க இந்திரனாலாகுமோ தான்
யென் மதத்தையடடக்க மாயனாலாகுமோ தான்
யென் ஆள்மையடக்கினல் அனைவர்களும் வாழ்வதுண்டோ
பென் பெருமைய றியாமல் யெடுத்துரைத்தாய் பெண்மயிலே
மகிழ்ச்சியா ன் போய்வாரேன் வாழ்த்திவிடைதாடியென்றார்
இந்தபடியாய் மன்மதனும் மெடுத்துரைக்கும வேளையிலே
அப்போது ரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆளழகா சொல்லுகிறேன்
தெய்வலோகத்தில் தேவர்களும் தான்கூடி
அகிலங்களபிழுமென்று அழைத்தார்கள் ஒந்தனையும்
மாயோனாலாகாது மற்றவருலாகுமோ தான்
இந்திரனாலாகாது யெவர்களாலாகுமோ தான்
பிர்மாவாகாது பின்னிறைவனாலாகுமோ தான்
அவரைவிட திருணியிலே அதிகமோ யென் கணவா
ஆள்மையடை ந்தவர்க்கு அவதிவரும் தப்பாமல்
யிந்தபடியா ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போது மன்மதரும் ஆளழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன் கேள்
தேவர்களும் யென்பெருமை தெரிந்து யெதிர்ப்பார்களோ
மாயோனும் யென்முன்னே மரித்து நிற்கபோகாது
இந்திரனும் யென்முன்னே யெதிர்த்து நிற்கபோகாது
பிர்மாவும் யென்முன்னே பின்வாங்கிப்போவாரே
மும்மூர்த்தி யென்னிடத்தில் முன்னிற்கபோகாது
ஆகையினாலே அவர்முன்னே போய்வாரேன்
போகவிடை தாடி பெண்மயிலே யெந்தனுக்கு

இந்தபடியாய் மன்மதனுமியம்பி நாரப்பொழுது
அப்போது ரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆணழகா சொல்லுகிறேன் கேள்
ஆண்மைவாளழிந்தவர்க ளனேகருண்டுலகத்தினில்
திருணியுனலே திரிபோதிரனழிந்தான்
இருமாப்பினலே இரணியனும் தானழிந்தான்
மார்க்கண்டற்காக மரலியழியலையா
இன்னமனேகம்பேர் இடும்பாலழியலையா
ஆகையினலே ஆண்மையை விட்டுவிடும்
இந்தப்படியாய் ரதியாள் யெடுத்துரைத்தாளப்போது
அப்போது மன்மதனும் ஆளழகனேது சொல்வார்
ஆண்மையெவருக்கும் ஆகாது பெண்மயிலே
ஆண்மையெவருக்கும் அடுக்குமடீ அருங்கிளியே
திருணியெவருக்கும் செல்லாது யென்கிளியே
செல்லாத ஆண்மை செலுத்துவண்டி தப்பாமல்
யென் திருணி அறிவார்கள தேவர்களு மெப்பொழுதும்
போய்வாரேன பெண்மயிலே போகவிடைதாடி யென்ருர்
இந்தப்படியாய் மன்மதராஜன் இனிசொல்லும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
உங்கள் ஆண்மை தெரியவரும யாவருக்கும் தப்பாமல்
உங்கள பெருமை தெரியவரும பூவுலகில் யாவருக்கும்
பெண் நகளெல்லாம் புகழ்ந்திடுவா ருண்பெருமை
தேவர்கள் முன்பாக செல்லாது உன்பெருமை
இந்த பயணம் யேறகாது மன்மதரே
நான் ரதியாளுடைய சொல்லை நாயகனே நீபொருப்பீர்
பெண்புத்தியென்று புரம்பேசி தள்ளாதீர்
இந்தபடியாய் ரதிதேவி இனிசொல்லும் வேளையிலே
அப்போது மன்மதனும் ஆளழகனேது சொல்வார்
அருங்கிளியே ரதிதேவி ஆரணங்கே சொல்லுகிறேன்

ஆயனுருள்ளமட்டும் அடியேனுக்கு சேதமில்லை
பெருமான் தானுள்ளமட்டும் பெண்மயிலே சேதமில்லை
மாயவனுருள்ளமட்டும் மங்கையரே சேதமில்லை
போக வேண்டாமென்று புலம்பி தவிக்காதே
மறுவார்த்தை சொல்லி மறித்து தடுக்காதே
நீ வாழ்த்தி அனுப்பினால் மன்மதனும் போய் வாரேன்
பெண்மயிலாள் யெந்தனுக்கு போகவிடை தாடியென்றார்
இந்தபடியாக மன்மதனும் இனிசொல்லும் வேளையிலே;
அப்போ ரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆணழகா சொல்லுகிறேன் கேள்

மாயவனாலேயல்லோ மன்னரெல்லாம் மாண்டதுவும்
ஆயனாலேயல்லோ அபிமன்னன் மாண்டதுவும்
திருமால் கபட்டாலே செத்தவர்கள் கோடியுண்டு
பெருமான் கபட்டாலே போனவர்கள் மெத்தவுண்டு
கோபாலர் வம்மிஷத்தில் கொடுங்கபடு மெத்தவுண்டு
மாயனுட வம்மிஷத்தில் மனக்கவடு மெத்தவுண்டு
சொந்தமென்று நம்பாதே சொல்தவரு மன்மதரே
இந்தபடியாக ரதிதேவி இனி சொல்லும் வேளையிலே
அப்போது மன்மதருமாளழகனேது சொல்வார்

அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்கேள்
கபட்டாலே மன்மதனை கண்ணை தொடுக்கபோகாது
யெவனாலும் மன்மதனை யெதிர்த்து நிற்க போகாது
புத்தியில்லா பெண்போலே பிதற்றுகிறாய் பெண்ணரசே
பைத்தியம் கொண்டவன்போல் பலவிதமாய் பேசுகிறாய்
புத்தியில்லா வார்த்தை பேருலகிலேற்காது
இந்தபடியாய் மன்மதராஜன் இனி சொல்லும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆணழகா சொல்லுகிறேன்
நான் பத்தினியாள் பேசினது பயித்தியம்போல் தோணுது

பெண்பெருமான் பேசினது பிதற்றுகிறேனென்றீர்கள்
பத்தினியாள் பேசினது பழுதாக போகாது

நான் உத்தமியாள் பேசினது ஒடனே தெரியவரும்
மென் பெருமாள் பேசினது பின்னால் தெரியவரும்
ரதியாள் புலம்பினது நாளை தெரியவரும்
நன்மை சொன்னேன்யென்கணவா தீமையென நீ நினைத்தீர்
இந்தபடியாய் ரதிதேவி இனிச்சொல்லும் வேளையிலே
அப்போ மன்மதனும் ஆளழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்கிறேன் கேள்
இத்தனைநேரம் நீயெதிர்வார்த்தை பேசினதும்
கெம்பீரமாகக்கேட்டிருக்க வேளையில்லை
சந்தோஷமாக தனித்திருக்க நேரமில்லை
தாதியாரெல்லோரும் பக்கத்திலிருந்து சொன்னால்
பாங்கிமாரெல்லோரும் பக்கத்திலிருந்து சொன்னாள்
தோழிகளெல்லோரும் சொல்லுறுதியாய் சொன்னாள்
சொல்லுறுதியாலே ரதிதேவி தோணாமல் பேசுருள்
இந்தபடியாய் மன்மதராஜன் இனிசொல்லும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆளழகா சொல்கிறேன் கேள்
அஞ்சிவயதினிலென்ன அறியாத நாளையிலே
கொஞ்சவயதில் குழந்தை பருவமதில்
பல்லுவிழுகுமுன்னே பாரியென்றுல் மன்மதர்க்கு
நான் தவழ்ந்து விளையாடயிலே தாரமென்றூர் மன்மதற்கு
தேவாகளெல்லோரும் திருப்பூட்டி வைத்தாரே
அன்று முதலின்றளவு அரைநாழி பிரிந்ததில்லை
இன்று பிரியமென்ன மனங்கூடு மென்றான்
இந்தபடியாய் ரதிதேவி இனிசொல்லும் வேளையிலே
அப்போதும் மன்மதனும் ஆளழகன்யேது சொல்வான்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்
மலைக்காதே ரதிதேவி மயக்கமோ மய்கையரே
யெனக்கு மலைப்பாக தோணுது நீ மதி மயங்கி நிற்கிறது

யெனக்கு அதிசயமாய்த் தோணுது நீ அறிவழிந்து நிற்கிறது
பிரமையாய தோணுது நீ புலம்பித் தவிக்கிறது
பெண் புத்திப்பாலே புலம்பித் தவிக்காதே
பிரமையாலே பித்துக் கலங்கி நிற்காதே
நீ புலம்பித் தவித்தாலும் நான் போய் வருவேன் தப்பாமல்
இந்தபடியாய் மன்மதராஜன் இளிசொல்லும் வேளையிலே
அப்போது ரதியாள் ஆரணங்கு மெய்யது சொல்வாள்
அல்லவே யென்காதலா ஆணழகா சொல்லுகிறேன் கேள்
நான் போகவேண்டாமென்று புண்ணியனே சொன்னதற்கு
நீர் பிடித்த பிடிவாதம் பேசுறீர் மன்மதரே
நான் சொன்ன சொல்லைக் கேட்டால் சுகப்படுவீரெப்போதும்
பெண்சொல்லை நீர் கேட்டால் பேருலகிற்கேற்காதோ
பத்தினியாள் சொல்கேட்க பாரிலுள்ளோர்க்கேற்காதோ
ரதியாளுட சொல்லை யென்னாயகனே தட்டாதீர்
இந்தபடியாய் ரதிதேவி இளிசொல்லும் வேளையிலே
அப்போது மன்மதனுமாளகனோது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன் கேள்
தேவலோகத்தில் தேவர்கள் தான் கொண்டாடி
ஆயிரங்கண்ணோனென்னை அழைத்துவரச் சொன்னாரே
போகாமலிருந்தால் பிழைமோசம் மெத்தவரும்
அருங்கிளி சொல்கேட்டு அரசாளவதுண்டோடியோ
பெண்புத்தி கேட்டு பூமியாளவதுண்டோடா
உன் புத்தி நான் கேட்டாலுலகத்திற்கேறகாது
பெண்புத்தி சொல்லாமல் பேசாதே போடி யென்றார்
இந்தபடியாய் மன்மதராஜன் இளிசொல்லும் வேளையிலே
அப்போது ரதிதேவி ஆரணங்கு மெய்யது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆளழகா சொல்லுகிறேன் கேள்
அஞ்சி வயதிலென்னை அறியாத நாளையிலே
கொஞ்ச வயதிலென்னை கொண்டு வந்த நாள் முதலாய்
பெத்தவரை நான் காணேன் பேருசொல்லக் கேட்டதுண்டு
வளத்தவரை நான் காணேன் மகிமைசொல்லக் கேட்டதுண்டு

தாயும் தகப்பனும் தம்மையன்றி யாரெனக்கு
கோவில் குளமும் குருபீடமுன் பாதம்
உன்னைவிட தெய்வமெனக்கேது யின்றே மன்மதனே
இந்தபடியாய் ரதியாளினிச் சொல்லும் வேளையிலே

அப்போது மன்மதனு ஆளழகனேது சொல்வார்
போகவேண்டாமென்று புலம்பி தவிக்காதே
நான் போகாமலிருந்தால் பொற்கொடியே தேவர்களும்
சாபம் கொடுத்திடுவார் சங்கரநார் தன்மகளே
ஆகையினாலே அன்புடனே போய்வாரேன்
இந்தபடியாய் மன்மதருஜன் இனிசொல்லும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆளழகா சொல்லுகிறேன்
போய்வாரேனென்ற சொல்லே புண்ணியனே மறந்து விடும்
போவது நிச்சயமானல் புண்ணியனே சொல்லுகிறேன்கேள்
நீர் வருகிறது மெத்த வருத்தங்காண் யென்சாமி
அங்கஜனே உன்னைப்பார்க்க அநேகநாள் சொல்லுமோதான்
இந்தயேக வடிவை யெக்காலம் பார்ப்பேனோ நான்
வகைமடிப்புக்கேத்த வகைமோசம் வந்து விடும்
இந்தபடியாய் ரதிதேவி சொல்லும் வேளையிலே
அப்போது மன்மதனு ஆளழகனேது சொல்வார்
போகவேண்டாமென்று புலம்பி தவிக்காதே
போய்வருவேன் தப்பாமல் பொற்கொடியே இப்போது
நான் திரும்பி வரமாட்டேனென்று தேன் மொழியே சொல்
நான் திரும்பிவருவேனடி தெரிவித்தேனுந்தனுக்கு [லாதே
அலங்காரம் பார்க்க அனேக நாள் செல்லுமென்ருய்
நீ நினைத்த உடன் வந்திடுவேன் நினைவழிந்து போகாதே
இந்தபடியாய்மன்மதராஜன் யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
உம்மைவிட்டு நானும் ஒருபொழுதும் பிரிந்ததில்லை
யென்னை விட்டு நீர் போகயென்ன மனங்கூடுமோ தான்

பெண்ணானை தனியவிட்டு புண்ணியரே போவதுண்டா
ரதியானை தனியவைத்து யென நாயகனே போவதுண்டா
இந்தபடியாய் ரதிதேவி இனி சொல்லும் வேளையிலே
அப்போது மன்மதனும் ஆளழகனேது சொல்வார்

அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்
நீ தனித்து இருப்பானே தாதிமாரில்லையோ தான்
நீபசித்து இருப்பானே பாங்கிமாரில்லையோ தான்
நீதிகைத்து இருப்பானே திரவியங்களில்லையோ தான்
உன் வார்த்தைதனை கேட்டால் யென் பிராண நாயகி ஓடி [வாருமே பூங்கிளிகள்
உன் குரலோசை கேட்டால் யென் கண்மணியே குயிலுகளுங் [கொண்டாடும்

தேரும் புரவியும் ரயன் நாயகியே திரமாயிருக்கையிலே
உனக்கென்ன குறைச்சலென்று யேங்குவதேனிப்போது
யிந்தபடியாய் மன்மதராஜன் இனி சொல்லும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்

அல்லவே யென் கணவா ஆளழகா சொல்லுகிறேன் கேள்
தாதிமாரிருந்தென்ன யென்சாமியைப்போல் வருமா
பாங்கிமாரிருந்தென்ன யென்பர்த்தாவைப்போல் வருமோ
திரவியமிருந்தென்ன யென்பத்தாவைப்போல் வருமோ
பச்சைக்கிளிகளெல்லாம் யென்காமக் களஞ்சியமே மைது [னரைப்போல் வருமோ
தேரும் கொடியும் என்சாமி மன்மதனே என் சீமானைப்போல் [வருமா

இருவரும் சுகமாக இருக்கலாம் மன்மதனே
இருவரும் சுகமாக இருக்கலாம் மன்மதனே
வேணுமென்ற வேடிக்கை விதவிதமாய் பார்த்திருப்போம்
இந்தபடியாக ரதிதேவி இனிசொல்லும் வேளையிலே

அப்போது மன்மதனும் ஆளழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்
வேடிக்கை பார்க்க யென்ரதிகிளியே வேளையிது அல்லவடி
அழைக்க வந்த தூதர்களும் அவசரமாய் நிற்கிறதும்

வர்வாய் சொல்லே கேட்டவுடன் வரிசையா நானவருக்கு
வாரேனென்று சொல்லியென் ரதியே வாக்குறுதி செய்து
[விட்டேன்
விருதுதளங்களையும் மின்னலிடையாளே வீதிதனிலிருத்தி
தேருங்கொடியும் யென் பிராண நாயகியே தெருவினிலே
[நிற்கிறதே
நான் பயணம் புறப்படையில் பார்வதியின் கண்ணே பதறி
[தடுக்காதே
இந்தபடியாய் மன்மதரும் இனி சொல்லும் வேளையிலே
அப்போரதிதேவி அரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆளழகா சொல்லுகிறேன் கேள்
அநேககோடி தேவர்களும் மை அழைக்கநீர்போவதுண்டோ
இப்போயழைக்க வந்த காரியத்தை மாயன் மகனே அன்பு
[டனே சொல்லுகிறேன்
அசுரருபத்திரவம் தேவலோகத்தி லண்டமிக்க போவதில்லை
சூரருபத்திரவம் தேவலோகத்தில் சொல்ல முடிபோவதில்லை
பரமசிவனாரும் என்கணவா மன்மதரேபார்த்து சிரிப்பார்கள்
அவர்தபசை குலைக்க உம்மை தானழைத்தார் தேவர்களும்
அவர் எண்ணத்தை நீர் குலைத்தால் என்சாமி மன்மதரே
[யெரித்திடுவார் தப்பாமல்
இந்தபடியாய் ரதிதேவி இனிசொல்லும் வேளையிலே
அப்போது மன்மதருமாளழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்கேள்
சங்கரனாரங்கே தபசிருப்ப துண்டானால்
நான்பாணம் தொடுத்திடுவே னவர்பதிவை குலைத்திடுவேன்
அவர் தபசு குலைந்தவுடன் தேவர்கள் சந்தோஷமாயிப்பார்
தேவர்களிடுக்கம் எந்தன்ரதிக்கிளியேதீர்ந்தாலேபோதுமடி
இந்திரனார் னெங்கு இடுக்கமது தீருமடி
வெகுதேவர் முன்பாக நான் வெந்தாலே கீர்த்தியுண்டு
இந்த படியாய் மன்மதராஜன்யெடுத்துரைக்கும்வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்

அல்லவே யென்கணவா ஆளழகா சொல்லுகிறேன் கேள்
கீர்த்தி வருமென்று என் இரையேகௌரவமாய் சொன்னீரே
நாம் சுகமிருந்து கீர்த்திபெற்றுக் தொல்லுலகோர்மகிழ்வார்
நீர்சாம்பலாய் போனவுடன் சந்தோஷமாயிருப்பார் [கண்
நீர்போகவே ஆகாது புண்ணியனே யென்கணவா
யென்றுசொல்லி ரதிதேவி யெதிரேமரித்தாள் கா—ண்
இருகையை நீட்டியெழுந்து மரித்தாள் கா—ண்
பெண்ணுனை கொன்றுவிட்டு புண்ணியனேபோய்வாரும்
இந்தப்படியா ரதிதேவி யெதிர்மரித்து நின்றுளே
அப்போது ஆங்காரமானுர்காண் அழகுதுரை மன்மதனும்
பெண்ணே நீஎன்னுடனேபோர்தொடுக்க ஆள்மையுண்டோ
பாரடியே பிஷணமேஉன்னைபடுக்கவைத்துநான்போறேன்
உன் கெர்வமடக்கிவைத்து கெம்பீரமாய் போறேன்
என்றுசொல்லி வில்லை யிடதுகையில் தானெடுத்தார்
வலதுகையில் பாணம் மன்மதரும் தானெடுத்தார்
இப்போயெதிர்த்தாலுன்னை இருதுண்டாய் கொய்திடுவேன்
இந்தபடியாய் மன்மதராஜன் யெதிர்த்து நின்றவேளை
அப்போ ரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
ஆங்காரந்தானுகி அழகு துரை முன்னெதிர்த்தாள்
உன் திறனியெல்லா மென்னெதிரே திரமாக்காண்பி இங்கே
யென்றுசொல்லி வில்லை யெதிர்மரித்து தானெடுத்தாள்]
மாருதட்டி சேலை வரிந்து கட்டினின்றுளே
மோகபாணத்தை ரதிதேவி முன்கையில் தானெடுத்தாள்
பாருங்காண் யென் திறனி பதருதீர் மன்மதரே
ஆங்காரத்தாலே அழகுதுரை முன்னெதிர்த்தாள்
காமனுட இருகண்ணும் கடுங்கனலாய்போகுதப்போ
இருவர்களும் கோபமுடன் யெதிர்த்துநின்றாரன்னேரம்
இந்தபடியாய் இருவர்களும் யெதிர்த்த போருடையிலே
மாரிபோல் பாணமதை வருஷித்தா ரன்னேரம்
மன்மதபாணம் ரதியாள் மார்பிலே பட்டுருவ

ரதியாளுடபாணம்மன்மதற்கு தலமாக பட்டுருவ,
சல்லடைக் கணபோல தய்ததுகாண் இருவருக்கும்
இருவரும் போர தொடுத்து யெதிர்த்தா ரொகுசாமம்.
இருவரும் கெர்சிதது யெதர்தது போராடையலே
கொசசனகள் கேட்டு தேவர்கள் கதிகலங்கி நின்ருர்கள்
இருவருக்கும மோகவெறி இருதயததிலடங்காமல்
மோகவெறி கொண்டு இருவரும மூர்ச்சையா தானிருந்தார்
மன்மதரும் மங்கையரும் மயங்கி கிடக்கயிலே
தூதர்கள் யெல்லோரும் சுருக்கமா யெழுந்திருந்து
இருவருட கெர்ச்சனைகள பயகமாய் கேட்டோமே
யென்ன அதிசயமோ யெந்தா தெரியாது
யென்றுசொல்லி தூதர்கள் யெழுந்து வாரார்கள்
அந்தபுரத்துக கருகாக வாரார்கள்
அங்கே தாதுகளெல்லோரும் தயங்கி நிற்க கண்டார்கள்
மங்கையரைப்பார்த்து தூதர்கள மன்மதனு ரெங்கேயென்ருர்
பாகமம ரெல்லோரும் மன்மதன் பத்தினியானண்டையிலே
தற்கமிட்டு சண்டைசெய் தருணம்போல் தோணுதுகாண்
இந்தபடியாய் தாதிகள் இருக்குமந்த வேளையிலே
அபபோது தூதர்களும் மனபாக யெது சொலவார்
அலலவெ தாதிகளா அவைவர்களும் கேளுமிப்போ
மலயுதத மானமட்டும் வகைமடிபபு மெத்தவுண்டு
யென்று சொல்லி தாதிகளை யினிவாங்களென்றழைத்தார்
தாதுகளு முன்னுக தூதர்களும் பின்னுக
யெல்லோருமாக இருவரிடம் வந்தார்கள்
கைபிடித்தவில்லோடே இருவருங் களைத்திருக்ககண்டார்கள்
எண்ணவந்தஎண்ணமெல்லாம் யிங்கேவெளியானதுகாண்
யென்றுசொல்லி தூதர்கள் யெங்கினு ரன்னேரம்
தாதிகள் யெல்லோரும் ரதியாளைத்தழுவி யெடுத்தணைத்தார்
தூதர்கள்யெல்லோரும்மன்மதனை தூக்கியெடுத்தணைத்தார்
சோகந்தெளிய இருவரையும் சொகுசா யுபசரித் தார்
மூர்ச்சை தெளிய முழுதும் உபசரித்தார்

இருவரும் கனிதீர்ந்து யெழுந்திருந்தா ரன்னேரம்
மன்மதற்கு தூதர்கள் வகையாக யேது சொல்வார்
வாதாடும் வேளைமன்மதனுரைப்பே வண்ணமையுள்ளகாலமிதோ
தெய்வலோகத்தில் தேவேந்திரன் முதலாய்
பெருமாளும் நாரதரும் பிர்மாவும் தேவர்களும்
மன்மதரை இன்னும் வரக்காணும யென்றிருப்பார்
தூதர்கள் மன்மதனுக்கு சொன்னருரே சொல்லலையோ
சொன்னதே யுண்டானு லவர்துருசாக வந்திடுவார்
கண்டவுடன் தூதர்களை காமனுர் வந்திடுவார்
வாருங்கள் மன்மதரே நாங்கள் வந்துநேரமாகுதுதான்
யென்னமோ யென்று யேங்கியிருப்பார்கள்
வாருங்கள் மன்மதரே நாங்கள் வந்து வெகுநேர மென்ருர்
அப்போரதியாளு மாரனுக்கு யேது சொல்வாள்
மன்மதரே யென் கணவா தூதர்கள் மன்ருட காரணமேன்
நாமிருவரும் போய்வருவோ மென்ருள ரதிதேவி
நான்கூடவருவனென்ருள் இகாமபண்ணியா ளன்னேரம்
நான் ஒக்கவருவேனென்ருள் உத்தமியா ளன்னேரம்
நாமிருவரும் போனுலெவர்களுக்கும் அச்சமுண்டு
நான் ஒக்க வருவேனென்ருல் ஓம்பரகட்கு மச்சமுண்டு
தான் கூட வந்தேனென்ருல் கோபாலற் கச்சமுண்டு
ஆகையினுலே யென் சாமி மன்மதரே அன்புயனே வாரே
[னென்ருள்
இத்தபடியாய் ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போது மன்மதரும் ஆளழகனேது சொல்வார்
அல்லவே யெஞ்ணரசே என்னுசைக்கிசைந்த கண்ணே
தெய்வசபைக்கி என்தேவி வருவதுண்டோ
கூட்டாக பெண்ஜாதி கூடவருவதுண்டோ
யென்னேடொத்த மன்னர்கள் யென்னை நகைப்பார்கள்
உன் இச்சை யதையெல்லாம் இருதயத்தில் தானடக்கி
உன் உத்தாரம் கேட்கிறேன் ஒருநாழி இங்கிருக்கேன்

பெண்ணே ரதிதேவி போகவிடை தாடியென்றான்
இந்தபடியாய் மன்மதராஜன் யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போ ரதியாளும் ஆரணங்கு யேதுசொல்வாள்
பயந்து நடுங்குதே நீர்பயணம் போய்வாருமென்றாள்
சரீரம்நடுங்குதே யென்சாமியே நீர்போய்வாரும்
யேங்கியே மனத்தளர்ந்து யென்னாளும் யெண்ணியப்போ
தன்னுடைய அரன்மனைக்கி தானடைந்தாள் தாதியுடன்
சாமியை நினைந்து சாய்ந்துவிட்டாள் பஞ்சணைமேல்
தூக்கங்கள் போலரதிதேவி நாயகியாள் சோகமாய் தான்
[விழுந்து
மன்மதன் மேலேகிடத்துரைக்சியவள் மனக்கலுதானாகி
கர்த்தாவே யென்றாரதியாள் கண்ணுறக்கமானாள் காண்
இந்தபடியாய் ரதிதேவி இருக்கின்ற வேளையிலே
அப்போது மன்மதனும் ஆணழகன் தான் பார்த் து
பத்தினியாள் வாக்கியத்தால் பயணமென்றார் மன்மதரும்
உத்தமியாள் வாக்கியத்தால் உடனே பயணமென்ற ர்
தென்றல் தேராவில் தேசிகனார் வந்துநின் று
மூன்றுபிர தாக்ஷணமாய் முன்பாக அபமிட்டு
சேயன்நான் வைகுந்தா ஜெயம் பெறவேணுமென்று
தட்டிகுதிரை தன்னை தொட்டுசலாம் செய்துபின்னே
சன்மார்க்க மூன்னாதிட சிம்மாசனபீட ம்
தன்னில் மதன்யேற பொன்னின் மலர்தூவ
சந்திர குடைபிடிக்க இந்திரபதி மதிக் க
சட்டென்றனவற்போற்ற கட்டியங்கள் கூறிவாழ்த்த
சாமரமாதர்போட பாவலர் துதிகொண்டாட
சாகரமுரசுபோட அஷ்டதஸ்திரிகள்பாட
தன்று அறங்கள்கூட வண்டுகீதங்கள் பாட
தங்கஆடை இடைகுலுங்க பெண்கள் படைநடுங்க
சங்கபணி ஜொலிக்க மகஷகொடி கனக்க

சக்கர தேரிலங்க உக்கரகொடி துலங்க
சரசத்தவுணர்போற்ற வரதனரதம் நடத்த
சம்பிரதிவேள் துரையும் அன்பாக தான்பார்த்து
விருதுதளங்களையும் பொருந்திடவே முன்னேவிட்டார்
வாத்தியங்களெல்லாம் மகாமேருதானடுங் க
பேரிகை சப்தம் பிரமலோகம் தானடுங்க
பதினாலு லோகமும் படபடென்று தானடுங்க
அஷ்ட்டகஜங்கள் அலறி நடுநடுங் க
உச்சியில் நக்ஷத்திரங்கள் உதிர்ந்து விழுந்துவிட
சந்திரரும் சூரியரும் தானே கெதிகல ங்க
சப்தசாகரங்களும் தளம்பி கொதியெழும்ப
தெய்வ லோகங்களுமே திகிலடைந்து தானடுங்க
இதுயென்ன அதிசயங்கள் யென்றுமெள்ள தான்பார்த்தார்
மன்மதனார் வருகிற மகிழ்ச்சியைத் தான்பாரு மென்றார்
ஆளழகன்வார அதிசயத்தை பாருமென்று ர்
தென்றல் தேர்வர திரமதனை பாருமென்றார்
இந்தபடியாக தேவர்களின்பமுடன் தான்பார்த்து
மனமகிழச்சியாக மகிழ்ந்திருந்தா ரன்னேரம்
மன்மதனார் தேர்நடத்தி வருகுறாரப்போது
காமபடைகள் கலந்து விளையாடிவர
மன்மதபடைகள் மகிழ்ந்து விளையாடிவர
கூட்டபடைகள் கூடிவிளையாடிவ ர
அனேக தளத்துடனே ஆளழகனப்போது
அவர் ஆசாரவாசல் அணிமுகப்பை கண்டார்கள்
தென்னந்தெரு நடந்து தேரோடும் வீதிவிட்டு
மன்னர் தெருகடந்து மந்திரிமார் வீதிவிட்டு
செட்டித் தெருகடந்து தெரிவையர்கள் வீதிவிட்டு
கடையும் கடைத்தெருவுங் கன்னடியார் வீதிவிட்டு
பட்டணங்கள் தாண்டி பயணமென்றார் மன்மதரும்
ஆரோக்கிய புரம்விட்டு அதட்டினர் தேருதன்னை
தெய்வலோகம் நோக்கி மன்மதராஜன் திடமாகபோகையிலே

வழியில் சகுணங்கள் வகைவகையா கண்டார்காண்
கூகையும் கோட்டானும் குலாவி தவிக்கிறதும்
காகமும் ஓரியும் கதடுதடுக்கிறதும்
ஓறிகுறிக்கிட்டு ஒந்திமரிக்கிறதும்
கொள்ளிவாய் பேய்கள் கூத்தாடி நிற்கிறதும்
ரெத்தமாய் பூதபிரேதம் நின்று கூத்தாடுறதும்
அஷ்டமத்தில் கெருடன் வட்டமிட்டு மரிக்கிறதும்
இந்தசகுணத்தைக்கண்டு யேங்கினர் மன்மதரும்
ஏங்கி மனங்கலங்கிமன்மதரைப்போ யெண்ணங்கள்வேறு கி
பத்தினியாள் சொன்னது பலித்ததென்றார்
உத்தமியாள் சொன்னது நலமாய் பலித்ததென்றார்
யெந்தன் ரதிகளியாள் சொன்னது நலமாய்பலித்ததென்றார்
யென்ன காரணமென்று யேக்கங்கள் தானு கி
காலமுடிவோ கர்த்தாவின் சொல்படியோ
யென் விதியின் பயனோ பிர்மதேவன் சொல்படியோ
யென்காலம் குருசிச்சோ கர்த்தாவின் சொல்படியோ
யென்று ஆலோசனைகள் செய்து ஆளழகன் தானினைந்து
யேதேதிருந்தாலும் யென்செய்வோமென்று சொல்லி
தைரியங்கள் கொண்டுதன் மனதைதான் தேற்றி
யெண்ண மெல்லாம தள்ளி யினிநடந்தார் மன்மதரும்
தெய்வலோகம் நேராக மன்மதன் திடமாக போனர்காண்
இந்திரன் சபையை யெதிராக கண்டார்கா ண்
முப்பத்து முக்கோடி முனிவர் சபை நடுவே
நாற்பத்து தெண்ணாயிரம் ரிஷி சூழ்ந்த சபைநடுவே
வானவரும் வசிஷ்டரும் மற்றுமுள்ள ரிஷிமாறும்
பேர் பெரிய நாரதரும் பேரான இந்திரு ம்
சந்திரரும் சூரியரும் தானவரும் வானவரும்
யெல்லோரும் கூடியிருக்கும் சபைநடுவே
தேரை நிறுத்தி மன்மதராஜன் திடமாக தானிறங்கி
தளங்களுடனே தானடந்து வந்தார்கா ண்

அப்பொழுது இந்திரனார் அன்பாக தானழைத்தார்
தேவர்களெல்லோரும் திடமாயெழுந்திருந்து
சிம்மாசனம் போட்டு திடமாக கையமர்த்தி
உட்காருமென்று உபசாரம் சொன்னார்காண்
நமஸ்காரமென்று மன்மதராஜன் நலமாக வீற்றிருந்தார்
இந்திரனைப்பார்த்து யேதுரைப்பார் மன்மதனும்
யென்னை அழைத்ததென்ன யிந்திரனே சொல்லுமென்றார்
பத்தினிமார் தவத்தை பங்காயழிக்கவோ தான்
உத்தமியாள் தவத்தை உடனே அழைக்கவோ தான்
சப்தரிஷிகள் தவத்தை யழிக்கவோ தான்
ஆர் தபசையழிக்க அழைத்தீர்கா ளிந்திரனே
இந்தபடியாய் மன்மதராஜன் யெடுத்துரைக்கும் வேளையிலே
இந்திரனப்போது யேதுரைப்பார் மன்மதற்கு
மகாமேருசார்பில் மகாதேவர் தபசிருக்கார்
மகாமேருசார்தல் மகாதேவர் தபசிருக்கார்
இமயகிரி பருவத்தில் உத்தமனார் தபசிருக்கார்
சப்தரிஷிகளுடன் சங்கரனார் தபசிருக்கார்
பார்வதியாளம்மை பணிவிடையா தானிருக்கார்
பார்வதியும் யீஸ்பரனும் பரிபூரணமாக வேணும்
இந்தபடியாக இந்திரனு யெடுத்துரைக்கும் வேளையே
அப்போது மன்மதனும் ஆளமகனேது செய்தார்
யெப்படியும் யீஸ்பரனை எய்திடுவே னென்கணையாள்
கரும்பை சிலைவளைத்தால் கரும்பெரிந்து போயிவிடும்
அரும்பிறைச் சிலைவடித்தால் அக்கினியாய் போயிவிடும்
வண்டுனை நாணிடுதொட்டால் வண்டெரிந்து போய்விடும்
காமவிகாரமுண்டோ கடவுளந்த யீஸ்பரர்க்கு
மன்மதவிகாரமுண்டோ மகாதேவரீஸ்பரர்க்கு
ஆருமேயாரும் ஆதிசிவன் முன்னெதிர்க்க
யெப்படிபோய் நின்றுயெதிர்ப்பதென்றார் மன்மதனும்
இந்தபடியாய் மன்மதராஜன்யெடுத்துரைக்கும் வேளையினில்
இந்திரனுமப்போ யேதுசொல்வார் மன்மதற்கு
மாயன்மகனாரே மன்மதரே கேளுமென்று ச

ஆயன் மகனாரே மன்மதரே கேளுமென்றார்
உம்முடையபாணம் விட்டால் உமைபாகர் மனங்கலங்கும்
சிலையை தொடுத்து விட்டால் சிவனார் மனங்கலங்கும்
உம்முடைய மகிமை ஒருவருக்கும் தெரியாது

ஆண்மை தெரியாமல் அரண்டீரோ மன்மதரே
உம்முடைய மகிமை சொல்வேன் உத்தமனே கேளுமென்றார்
ஆளழகா மன்மதனே ஆனந்த மார்பழகா
பேரில் பெரிய பெருமான் மகனாரே

மாயன் மகனாரே மன்மதரே கேளுமென்றார்
கெங்கையை சிரமதனில் தரித்ததும் உன் பெருமை
கெவுரியவளை ஆடையில் வைத்த துன் பெருமை
மகாவிஷ்ணு லட்சுமியை மார்பில் வைத்த துன் பெருமை

சரஸ்வதியை பிரமதேவன் நாவில் வைத்த துன் பெருமை
யெந்தனுக்கு ஆயிரங்கண் வந்ததும் உன் பெருமை
அகலிகையை பெண்ணாக செய்ததுவும் உன் பெருமை
யெத்தனையோ பெருமைமகளு மிருக்குது காணுந்தனுக்கு

தஞ்சமென்று வந்தவரை தற்காக்க வேணுமென்றார்
அபயமென்ற சொல்லை ஆதரிப்ப துன் பாரம்
பாணந் தொடுத்து விட பயமேது மன்மதரே
பரமனை கொல்லவோ நீர்பாணம் தொடுப்பதுவும்

ஆதிசிவன் மன்னெதிர்க்க ஆள்மையுண்டோமன்மதரே
அவர் தபசை குலைக்க தயங்காதீர் மன்மதரே
மோகினி வேஷமுடனவர் முன்பாக போயி நின்று
காமபாண மெடுத்துமது கரும்பாலே தொடுத்து விடும்

காமபாணம் பட்டவுடன் கலங்குமே அவர் மனது
அவர் தபசு குலைந்தவுடன் சகலருக்கும் சந்தோஷம்
அவர் அங்காரகோபத்தை அடக்கி வைப்பீர் தப்பாமல்
அப்போது சந்தோஷமானார்காண் சாமிதுரை மன்மதனும்

சீறியெழுந்து மன்மதன் திரமுடனே யேது சொல்வார்
யென்ன காரியமென்று மன்மதனியம்பலுற்றான்னேசம்
அவதிவரும் காரியத்தை அறிந்தவரும் பார்க்காமல்

இந்திரனார் சொன்னதிரு விளிமயக்கந் தானுகி
தெய்வசபையதிலே தேவர்களின் மத்தியிலே
யென்ன சபதமிட்டார் யிந்திரனார் முன்பாக
இந்தக்ஷணமே யீஸ்பரன் முன்பே யெதிர்த்து
கரும்பென்ற வில்லெடுத்து கையிலே தான்பிடித்தார்
வில்லுக்கிசைந்த வீரபாணம் தானெடுத்தார்
முஸ்துப்புடனே தேவர்கள் முன்பாக னின்றூர்காண்
யிந்திரனைப்போ மன்மதனை யெதிர் நின்று பார்த்தார்காண்
சவுரியத்தி லுமக்கு சரி யொருவரில்லை யென்றூர்
மன்னிநல் அந்திரனர் மனமகிழ்ந்து சொல்லயிலே
உச்சாயம் கொண்டு மன்மதன் உத்தண்ட மானர்காண்
கரும்பென்ற வில்லெடுத்து கருவண்டால் நாணிதொட்டு
அரும்பை கணையாக அய்ந்து கணை தானெடுத்தார்
கூட்டபடைகளெல்லாம் கூட்டினர் மன்மதரும்
மன்மதபடைகளெல்லாம் மகிழ்ந்து விளையாடிவர
காமபடைகள் கலந்து விளையாடிவர
தர்பூருவீணை சகலமுந் தான்முழங்க
சின்னங்களும் சிறுகன்னிமா ருடிவர
சாந்து புனுகு ஜவ்வாது பரிமளிக்க
கெந்தங்கள் கஸ்தூரி யெங்கும் கமகமக்க
சகலதளங்களுடன் சந்தோஷமாக வந்து
தென்றல்தேர் தன்னருகில் திடமாக வந்துநின்று
மூப்பிரதக்ஷணம் வந்து முன்பாக தூபமிட்டு
தென்றல் தேர்மீதில் திடமாகத்தானேறி
அன்னகிளிமேலே அமர்ந்தார்காண் மன்மதரும்
மண்டியிட்டு தானிருந்து வசந்தனைத் தான்பார்த்து
அஞ்சுலக்ஷணை முள்ளதொரு பஞ்சபுரவியையும்
அதட்டி விடுமென்றுரைத்தார் அக்ஷணமே வசந்தனவர்
காலகண்ட யீஸ்பரன்மேல் கனபோபங் தானுகி
மகாமேருவை தேடி மன்மதரும் வந்தார்காண்
சுவாமி இருக்கும் தபசுநிலே கண்டார்காண்

கண்டார்காண் மன்மதனும் காளகண்ட யீஸ்பரனை
எண்ணுறது யெண்ணியவர் யேங்கி இருக்கையிலே
தன்னுடைய மந்திரிகள் தலைகர்த்தர் அனைவரையும்
பார்த்தார்காண் மன்மதனும் பரமசிவன் தன்தபசை
அவர் தெக்ஷணு திருமுகமா யிருக்கையிலே
அவர் ஞான நிலையில் நலமாகத்தானிருக்க
அவரெண்ண முடிவில் யோகாந்தமாயிருக்க
அவர் கண்ணை திறவாமல் கவனமாய் தானிருக்க
அவர் யோகாந்தமாக இருக்கின்ற வேளையிலே
சுத்தி வளைந்தார்கள் சூரர்படையது போல்
அருகில் வளைந்தார்கள் அசுரபடையது போல்
மன்மதப்படையை மயக்கமுவ யெய்விட்டார்
அவரவர்கள் ஆண்மையை அரனிடத்தில் காட்டலுற்றார்
அப்போது மன்மதனும் ஆளமுகந்து செய்தார்
இடதுகையில் வில்லும் வலதுகையில பாணமுமாய்
சேர்த்துகணை தொடுத்தார் சிவனுரைப்பார்த்து
கோத்துக் கணைதொடுத்தார் கும்பலிங்கர் தன்மீதில்
மண்டியிட்டு பாணம் மாரபரள வாங்கயிலே
பாணமிடப் போகையிலே பார்த்தார்காண் யீஸ்பரனை
பார்வையாக பார்த்தார்காண் மன்மதனும்
யெதிரில் நின்று பார்க்கையிலே யேங்கனார் மன்மதனும்
கைவில்லை கீழ்போட்டு கலங்கினார் மன்மதனும்
தெய்வசபையிலே திடமாய் சபதமிட்டோம்
தேவர்களெல்லாம் நமக்கு தீம்பு நினைத்தார்கள்
தீம்புநினைத்தார்கள் சிவன் மேல் கணைதொடுக்க
தேன் மொழியாள் வாக்கியம் திரமாய் பலித்ததிப்போ
ரதியாளின் வாய்சொல்லும் நலமாய் பலித்ததிப்போ
சிவன்மேல் கணைதொடுக்க சிந்தை கலங்குதிப்போ
சிந்தை கலங்குதிப்போ சிவனார்முகம் பார்க்க
ஆதிசிவனே அரனுரே உன் செயலோ

வேதவேதாந்த விமலனே உன் செயலோ
என்கால முடிவாலே தேவர்கள் கருதினரெந்தனையும்
கருத்தினுதித்ததென்ன கடவுளே தஞ்சமய்யா
கர்த்தனே தஞ்சமென்று கலங்கி நின்றார் மன்மதரும்
யெண்ணி நினைத்தார் காண் யீஸ்பரனின் தன்மருகன்
அப்போ குரோதனெனும் அன்பான லோபனெனும்
அய்ந்துபேர் மந்திரியும் அன்புடனே வந்தார் காண்
வந்தவரை கண்டு மன்மதராஜன் வகைமோசம் போனனென
யெந்த விதத்தால் யீஸ்பரனை வெல்வோ மென்றார் [ன்றார்
ஆலோசனைகள் செய்து அனைவரும் தான் கூடி
யிருக்கின்ற வேளையிலே யீஸ்பரியை கண்டார்கள்
கண்ணாலே கண்டார்காண் காசாம்பு நிறத்தாளே
உமையவளை கண்டார்காண் ஒளிவுள்ள மன்மதரும்
அப்போது மன்மதரும் ஆளழகனேது சொல்வார்
இடுக்கத்தை தீர்த்தருளும் யீஸ்பரியே தஞ்சமம்மா
வேதாந்த முனிவருக்கும் விமலருக்கும் நீதுணையே
காரணமாய் நின்ற கண்ணொளியே தஞ்சமம்மா
நாலவேத மாகிநின்ற நாரணியே தஞ்சமம்மா
உலகத்தை யீன்றருளும் உத்தமியே தஞ்சமம்மா
சரணமடைந்த யென்னை தற்காக்க வேணுமம்மா
பத்தினியாள் வாக்கியத்தை பாருமல் வந்து விட்டேன்
உத்தமியாள் வாக்கியம் உடனே பலித்ததம்மா
உறுதிகொண்ட மன்மதனும் உத்தண்ட மானார்காண்
கடவுளைப்பார்த்து கடுங்கோபத் தானுகி
தேரும் புரவியும் தெரியாமல் தானுத்தி
விருதும் தளங்களையும் வெகுதூரமாய் நிறுத்தி
கையில் பிடித்திருந்த கரும்புவில் கீழ்போட்டு
வில்லெடுத்து புண்ணியனுர் விரைவாக கைபிடித்து
வண்டினுல் நாணிதொட்டார் மன்மதனு ரப்போது
புட்பபாண மைந்தும் புண்ணியனுர் தான் தொடுத்தார்
தாண்டியே மன்மதனும் தப்படியில் வந்து நின்று

யீஸ்பரனுர் நிலையை யெதிரினிலே தான்பார்த்து
மண்டியிட்டு உட்கார்ந்து மகாதேவர்முன்னெதிர்த்தார்
வில்லைவளைத்து விசையாக பாணம்வைத்து
மார்புக்கு நேராக வாங்கியிழுத்தார் காண்
தோண்பரண வாங்கி தொடுத்துவிட்டாரன்னேரம்
பாணம் பறந்துவந்துபட்டதுகாண் யீஸ்பரன்மேல்
மார்பிலே தைத்து மருகி உருகயி—லே
திக்கென்றெழுந்தார் சிவபெருமானன்னேரம்
கண்டார்காண் பாணத்தை காலகண்ட யீஸ்பரரும்
கோபாக்கினியாக கோபித்தார் யீஸ்பரரும்
மூப்பருதுகளையொரு முகூர்த்தத்தில் தானெரித்தோன்
திரிபுருதுகளை யொருக்ஷணத்தி லெரித்தவரும்
அப்போதவற்கு அதிககோபம் வந்ததில்லை
அப்போதந்த அக்கினிக்கண் திறந்ததில்லை
அன்று பூமியொரு அச்சாக பூலோகம் தேருக
ஆகாசங் கொடுங்கை அஷ்டகஜம் தானுக
நக்ஷத்திரங்கள் நல்லதங்காளுமாய்
மூப்பத்து முக்கோடி முனியவர்களும் குடையாக
நாற்பத்தெண்ணுயிரம் ரிஷி நவமணிகள் தானுக
வேதங்கள் சாஸ்திரங்கள் வெள்ளைபுரவியுமாய்
சந்திரரும் சூரியரும் தாங்குமிரு வண்டியுமா—ய்
கயிலாசமேரு கனத்ததொரு வில்லா—க
ஆதிசேஷனவனும் அரண் நாணி தானு—க
கபடமுள்ள மகாவிஷ்ணு கணையாக தான்சமைந்தார்
காலாக்கினியாக கதறுதுகாண் பாணமப்போ
வில்லிலே தான்பூட்டி விசையா யிழுக்கலுற்ருர்
பாணத்தை விரட்டுது தான் பரமன்கண் அக்கினியும்
நெத்திக்கண் அக்கினி நேரேபோய் பாய்ந்தது—காண்
பாய்ந்தவுடனே மன்மதனை பத்திற்றே வேகமதாம்

சொழுந்து விட்டெரியயிலே மன்மதன் கொண்டவனே
ஆதிசிவனே உனக்கபய மென்ருர் மன்மகரும் [நினைந்தார்
அரநாரே தஞ்சமென்று அக்கினியாய் வெந்தார்காண்
அவர் பச்சைதிருமேனி யெல்லாம் படிசூரணமாச்சி

அவர் மாணிக்க மிழைத்த மகுடமெரிந்த தப்போ
ஆணிப்பொன்னிழைத்த அழகு ரெத்தினம் சிதறிவிழ
சாலைக்கினியாக காமனெரிந்தார் காண்
இந்தபடியாக மன்மதன் யெரிந்ததோர் வேளையிலே

அப்போ மன்மத படைகளெல்லாம் மனங்கலங்கி நின்றார்கள்
அன்று முப்பத்து முக்கோடி முனிவர்களும் வந்தார்கள்

நாற்பதெண்ணாயிரம் ரிஷிமார்கள் வந்தார்கள்
சந்திரரும சூரியரும தானவர்கள வந்தார்கள்

இந்திரரும் வானவரும் இமையவர்கள் வந்தார்கள்
அஷ்டதுக்கு பாலர்கள அனைவருமே வந்தார்கள்

ஆயனும் பிரமாவும் அனைவர்களும் தானகூடி
தபசி நிலை யடியிலதான் வந்தாரெல்லோரும்

நெற்றிக்கண்ணுள்ள நிமலனையும் கண்டார்கள்
அபயமபயமய்யா ஆண்டவனே தஞ்சமென்ருர்
நகைத்து புரமெரித்த நாதனே தஞ்சமய்யா
காலனை தனை உதைத்த கடவுளே தஞ்சமய்யா

ஆதிமூலப் பொருளே அரனாரே தஞ்சமய்யா
அபயஸ்தம் தாருமய்யா ஆண்டவனே போற்றியென்ருர்
யேழைபங்காளா யெங்களை காருமய்யா
திரிபுரத்தை சிரித்தெரிந்த தேவனே போற்றியென்ருர்
அம்மையார் பார்வதியை அந்நேகர்முறை யிட்டார்கள்
யிடுகத்தை தீர்க்கவந்த யீஸ்பரியே தஞ்சமம்மா
யென்றுசொல்லி தேவர்கள் இருகை குவித்து நின்ருர்
அபயஸ்தம் கொடுத்து அமர்த்தினர் யீஸ்பரரும்

அஞ்சாதீரென்று ஆதிசிவன் அருகில் வாவழைத்தார்
அனைவர்களும்கூடி அருகில் வந்தாரந்நேரம்
சலவியாகூலம் தீரதேவர்யள் சந்தோஷமானுர்காண்

இந்தபடியாக இருக்கின்ற வேளையிலே
அன்றுமன்மதன்மேல் சிந்தையாய் மகராசி தூங்கினவள்
புருஷன்மேல் சிந்தையாய் பெண்ணரசியாள் தூங்கினவள்
ஆரோக்கியபரக்கில் வாண்டு நித்திரை செய்யரவள்
பஞ்சணை மேலே படுத்து நித்திரை செய்யயிலே
சப்ரமஞ்சத்தில் ரதியும் களித்து நித்திரை செய்யயிலே

அல்லல்கனவும் அதிசிவன்மகனும் வாட்டியும் காணலுற்றாள்
காணாத சொற்பனங்கள் கண்டாளே அன்னேரம்

யென்னகனவு கண்டாள் பெண்கிளியாளப்போது
பத்தாபறப்படையில் பஞ்சகுணம் கண்டதுவும்

சகுணத்தைகண்டு காமராஜன் கன்னி நடக்கவும்
செய்வலோகத்தில் தேவர்கள் தேருகளை சொன்னதுவும்
தேருகளையாலே மன்மதராஜன் தெளிந்துகனை யெடுத்து

யெதிர்த்து கணையெடுத்து ஈசன்மேல் போட்டதுவும்
அபயம் அபயமென்று அங்கஜன் வணலா யெரித்ததுவும்
கொண்டவனைத் தானினைத்து குபீரென்று தெறிக்கிடவும்

நித்திரையில் கனவுகண்டு நேரிழையாள் தானழுதாள்
ஐயோ சிவனேயென்று அலறிவிழுந் தழுதாள்

அலறிவிழுந்து அடிவயிற்றில் அறைந்து கொண்டாள்
அப்போ தாதியரோடி வந்து தாயேயென்று வாய்மூடி

யென்ன காரணமென்று யெங்களுக்கு சொல்லுமம்மா
தேருகளை சொல்லிதாருமா கிரமமாக கேட்கையிலே

திரேகம்பதருதேர தடுதேண நாயகிக்கு திடுக்கிடுதே அந்நேரம்
வாய்கள் தடுமாறி ரதிக்கு மதிமயக்கம் கொண்டுதப்போ
யென்னவென்று சொல்லுவாள ஏந்திழையாளன்னேரம்
நித்திரையில் கனவுகண்டேன நேரிழையே சொல்லுகிறேன்
பாவியுட சொல்லுயெனக்கு பலிக்கக்கனவு கண்டேன்

கண்டவிட மெல்லாம் யெனக்கு கானகமாய் தோணுமடி
நீ சுகரிக்குதில்லை யெனக்கு நின்று கால்போவதில்லை

நான்பாவிபடுந்துயரம் பார்த்துவந்தோர் சொல்லலையே
நான் கன்னிபடுந்துயரம் கண்டுவந்தோர் சொல்லலையே

நீர் தெய்வசபைபோக நான் சிந்தை கலங்குவதேன்
நீர்னாரோர் சபைபோக நான் மங்கை கலங்குவதேன்

நான் பெண்சாதி சொல்தவறி போனீரே யென்கணவா

என்சிந்தை கலங்கவந்த தீமையென்ன யென்சாமி
நான் மங்கைகலங்க வந்தமடிப்பெண்ணே யென்றுரையே

மடிபுகள் வந்ததென்றால் யென் மன்மதருனே மனது
[கலங்குதிப்போ

கலக்கமே வந்ததென்றால் நான் கட்டழகி தாரமோதான்
அகடுகள் வந்ததென்றால் நானருங்கிளியாள் தாரமோதான்

அருங்கிளியாள் தான்காண ஒரு அறிக்கை வரக்காணும்
ஒம்முடைய சேதியறிய ஒரு சேவகரை நான்காணேன்

ஒம்முடைய வார்த்தைபறியஒருமன்னரை நான்காணேன்
அஞ்சலொன்றும் காணேனடி அருங்கிளியே யென் தாதி

அமுதபுரண்டு ஆதிசிவன் மகனும் ஆங்காரம தானுமி
மனதுகலங்கி ரதிதேவி நாயகிக்கி மனக்கவலையு மிடாகி

தாதியரைபார்த்துமைநயமநம் யேதுசொல் வான்
பாங்கியரைபார்த்து பைங்கிளியாளேதுசொல்வான்

அனைவரையும் பார்த்து ரதியானருகில் அழைத்தானே
அவர்சிம்மாசனமும்மன்மதராஜன் சேர்ந்திருந்தமண்டபமும்

அவர் கொலுவிருந்த மண்டபமும் கோட்டையும் கண்டா
அங்கே தங்கமிழைத்த சதுர்படியை கண்டா னோ [னோ

சங்கடம் தெளியுமடி தாதிகளா வாங்களென்று ன்
யென்று ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையி லே

நல்லதென்று சொல்லி நடந்தார்கள் தாதிகளும்
தாதிமாரோடே தய்யல்ரதி அங்கே வந்தா ள்

சிம்மாசனமும் மன்மதராஜன் சிறந்திருக்கும் மாளிகையும்
உப்பரிகை மேடைகண்டு உருகினள் ரதிதேவி

மாளிகையைக் கண்டு மயங்கி நின்று னன்னேரம்

சதிர்சபையைக் கண்டு தயங்கினள் ரதிதேவி
யெப்போ வந்திச்சபையில் இருப்பீரோ மன்மதரே

கண்டு மகிழ்ந்துயென் காம களஞ்சியமே கண்குளிரபார்ப்பே
தாதியரை தானழைத்து தயங்கி மெள்ள சேதிசொன்னாள்(கு
அடி சேனாதிபதியே அவர் சேதி அறியவேணும்
அவர் சேதி அறியவொரு சேவகரை நான் காணேன்

தெய்வசபைக்கு நான் தேன்மொழியாள் போய்வாரேன்
வானவர் சபைக்கு நான் மங்கையரும் போய்வாரேன்
நான்கண்ட கினாபொல்லாது கன்னியரே போய் வாரேன்

இந்தபடி யாரதியவளும் யெடுத்துரைக்கும் வேளையிலே
தாதிகள் யெல்லோரும் ரதிக்கு தைரியங்கள் சொன்னார்கள்
அப்போது பாங்கியவர்கள் ஆதரவு சொன்னார்கள்
நீபத்தினியாள் கண்டகினா பலியாது ஒந்தனுக்கு
நீஉத்தமியாள் கண்டகினா உளரிலே சாய்ந்துவிடும்

நீயெதுக்கும் அஞ்சாதே யென்துரசசி பெண்ணரசே
நாங்கள தெய்வலோகம் போயி சேதி கொண்டுவாரோமிப்
வானவர்லோகம்போயி வகைதெரிந்து வாரோமிப்போ (பேச
தாதியர்கள்யெல்லோரும்ரதிக்கு தைரியங்கள்சொன்னார்கள்

ன்மதனார் சேதிகொண்டு வானவர்கள் வந்தார்கள்

ஆளழகன் சேதிகொண்டு ரதிக்கு அறிக்கையிட வந்தார்கள்
கைகட்டிவாய் புதைத்து தூதர்கள் கடக்கபோய் நின்றார்கள்
அடிவணங்கி நின்று ஆரணங்கு முன்பா க

பாதம் நடுங்கி பைங்கிளியாள் முன்பா க

சரீரம் நடுங்கி தூதர்கள் தான் பயந்து நிற்கையிலே

தாழ்ந்து நின்ற சேவகரை தாயாரும் தான் பார்த்து
மன்மதனார் சேதி தன்னை வண்மையுடன் சொல்லுமெனறாள
ஆளழகன் சேதிதன்னை அன்பாக சொல்லுமென்றாள
தயிரியவான் சேதி தன்னை தையலாளும் கேட்கலுறாள

தையல் முகம் பார்த்து தூதர்தாழ்ந்து மிகப்பணிந்து

அரியவரே யென் தாயே ஆரணங்கே சொல்லுகிறேன்கேள்

வாய்திறந்து சேதி சொல்ல வார்த்தை தடுமாறுதிப்போ
தாள் திறந்து சேதி சொல்ல சரீரம் நடுங்குதம்மா
சரீரம் நடுங்குதம்மா தாயாரே சொல்லுகிறேன் கேள்

அதிசிவனார் வருக்சபக தானிருந்தா ர்
இந்தமாயமாய் மீன்மாச் இருக்கின்ற வேளையிலே
தேவர் சொல்கேட்டு மன்மதராஜன் சிந்தை கலங்கிவிட்டார்
அவர் சிந்தை கலங்கி சிவபெருமான் முன்புவந்து

அவர் பூசித்து வில்லைவளைத்து புஷ்பபாணம் தான்போட்டார்
அங்கவன் தொட்ட கணை அரனார்மேல் தைத்ததம்மா
மாபிரேமைபட்டு மறுபாகம் உருகயி லே
அப்போது அரசனுக்கு அதிகோபந்தான கி

நெத்திகண் திறந்து நீலகண்டர் தான் பார்த்தார்
கணைதொடுத்த மன்மதனும் கடுந்தனலாகி விட்டார்
அவர்பச்சை திருமேனி பட்டபோ லாச்சுதம்மா
அவரழகு திருமேனி அக்கினியால் வெந்ததம்மா

மன்மதனை யெரித்தவுடன் மகிழ்ந்திருந்தார் தேவர்களும்
இவ்வார்த்தை தன்னை யிவர்பினர் தூதர்களும்
வாய்சொல்லை கேட்ட வுடன் ரதிதேவி மனது துடிதுடித்து
சரீரம் மறந்து ரதிதேவி நாயகியும்சாய்ந்தாளே மெய்மறந்து

மெய்மறந்து தானயர்ந்து மின்னிடையாள் தான் விழுந்தாள்
நின்றநிலை தவறி நீலகண்டர்தன்மகளும் நிலத்தில் விழுந் (தாளே
நிலத்தில் விழுந்தவுடன் ரதிதேவி நாயகிக்கி நினைவு பிறந் (தது காண்

நினைவு பிறந்து ரதிதேவி நாயகியாள் நிலத்தை தடவலுற்
அய்யோ சிவனேயென்று அடித்தாள் நில மார்பை (றுள்
பூமியைவிட்டு போக்கென்று தானெழுந்தாள்
நிலத்தில் தரிக்கிதில்லை ரதிதேவி நாயகிக்கு நிலத்தில்கால் (பாவதில்லை

ஆபரணமெல்லாம் அவிழ்த்தெறிந்தா ளன்னேரம்
தலையின்மயிர் விரித்து தயங்கி நின்று தானழுதாள்
குத்தினள் மார்பில் குமரி நாலடிவயிற்றில

பய்த்தியகாரியைப்போல் பலவிதமாய் பேசுகிறாள்
பித்து கொண்டவன் போலெ பதற்றி உளருகிறா ள்
சதுரடியைவிட்டு சங்கரனார்மகளும் தானோடி வருகையிலே
நாதமாரெல்லோரும தாமோடி வாருர் க—ள்

வாசல்மன்ன ரெல்லோரும் மதிமயங்கி நின்ருர்கள்
உசாரவாசல் அணிமுகப்பில் வந்தார்கள்
அங்கே மூர்ச்சையாய்தான் விழுந்தாள் மெய்குழலாளன்னே
அப்போது தாதியர்க ளருங்கிளியை தானெடுத்து (ரம்
தூக்கியெடுத்து சோகந்தெளிய வைத்தார்
அப்போ ரதியாளும் ஆலோசனைகள் செய்து
ஆடி தாதி பெந்தன் அழகியபல்லக்கை கொண்டா
அந்திரதேவர்களை சிந்தை கலங்க செய்வேன்
அதிவீர இந்திரனை மதியை குலைத்திடுவேன்
அமரர்பதியை அடக்கி வைத்து வந்திடுவே ன்
அல்லாமல்தெய்வலோகம்கொள்ளைவிட்டு வாரே னென்ருள்
அப்போது தாதியர்கள் குப்பென்று தண்டிகையை
அன்னேரம் ஆசாரவாசல் முன்றலே கொண்டு வந்து
ஆதிமகள் தனக்கு சேதி சொன்னார் தாதியர்கள்
அருங்கிளி வாகனத்தான் துரூசாரகவேயெழுந் து
அன்னிகிளியாளும் பல்லக்கிலேறி விட்டாள்
அப்போ தாதியர்கள் தண்டிகையை தக்ஷணமே தான்தூக்கி
ஆரபார வேகமுடன் வீரசூரங்கொண் டெழுந்து
அதிசுருக்கில் போகவென்று சதிருகவே நடந்தாள்

முடுகு

ஆலமுண்ட கண்டன்மகன் பாலையம் நிறைந்து சூழ
அந்த இந்தரனை
தேடிமுந்து முத்துதாதி ஓடி அதிரவனங்கள் பொடி பொடி
(யாகவும்
பூமியசைந்தாடவும் தேவர்கள் கண்டோடவும்
அங்கரும்பு மாரனுட மங்கையரை கொண்டிரக்க
அங்கேதேவர் சபையெ ல்லாம் தேடினர் மன்மதரை
யெங்கினுந்தேட பெவர்களையும் காணவில்லை
பாசிலுள்ள பேர்களெல்லாம் பரதவித்து நின்ருர்கள்

தெய்வசபையெங்கும் தேடியும் காணவில் லை
தெய்வசபையில் தேவர்களை காணவில்லை
சங்கரன் தபசடியில் தான் தேடிவந்தா ளே
அங்கே சகலரையும் கண்டு தயங்கி நின்று பார்க்கயி லே
அங்கே இந்திரனு மப்போ யெதிர் நிற்க கண்டாளே
கண்டவுடன் ரதிக்கு சனகோப முண்டா கி
அல்லவடா யிந்திரனே சொல்லுகிறேன் கேளுனக்கு
அன்னுனில் வேள்குமாரன் மன்னவன்செய் வாதனையால்
அகல்கை நீபுணர்ந்தது கண்டுமா முனிவன்
ஆயிரங்கண்ணுக்கிவைத்த தாழ்மையதை நீயறிந்தும்
அந்த ஆத்திரத்தை மனதில் வைத்தேன் கோத்திரத்தை நீ
ஆரடா சண்டாளா பாரடா ஒந்தனு ட
நீயாளும் தெய்வலோகமதை பாழடைய செய்குரண்டா
ஆடாத கூத்தாடி வாடவெளியே யென்ருள்
ஒத்தன் இந்திராணியவலை யெந்தனைப் போலாவாள்
அவளும் யென்னைப்போலலைய வெகுநாளா மோ
அப்போதடித்து கொண்டாள் மார்பிலலரியே தான் விழுந்
அங்கே சங்கரதெரித்த சாம்பனுக்கண்டாளே (தாள்
அய்யய்யோ பாவியென்று அலறிவிழுந் தழுதா-ள்
யென் கணவா மன்மதனே இதற்கோ நான் பிறந்தேன்
அக்கினியில் நீயெரிய அவர்கள் சொல்லை கேட்டீரே
நீதியாயெரிய தேவர்கள் சொல் கேட்டீ ரே
பெண் சாதி சொல்லை என் துரையே நீரும் பொருக்காமல்
சிவனுடைய அருகில் தேவர்களை தான்பார்த்து (போனீரே
தூரஒதுங்கி நின்று துடங்கி புலம்பலுற்ரு ள்
பக்கம் ஒதுங்கி பரதவித்து தானமுதாள்
இருவரும் சேர்ந்திருக்க யெக்காலம் காண்பமோ தான்
வாய்விட்டலரி ரதியாள் மதிமயங்கி தானமுதாள்
மாலை நெரிஞ்சிவிழ மண்மேல் புரண்டமுதாள்
சாந்து புனுகு ஜவ்வாது தொட்டகையால்
நீரமான மன்மதரை சேர்த்துதழுவும் கையால்

ஆளழகன் மன்மதனை அணைத்து தழுவுங் கையால்
புண்ணியனுர் மன்மதனை புணர்ந்து தழுவும் கையால்
ஆளழகன் பணிவிடைக்கி அமர்ந்திருந்த கையாலே
அவர்பணி விடைக்கேத்த பத்தினியாள் கையாலே

தரையிலுள்ள புழுதியெல்லாம் தடவலுற்ருளப்போது
மயிருல் ஜம்பங்கி யென்னை வாரி முடித்ததுழல்
தெய்வசபை புழுதிபட்டு குழல்சிக்குபட நின்றழுதாள்
அறைந்து கொண்டாள் மார்பில் அடிவயிற்றில் தானரைந்

குத்திகொண்டாள் மார்பின் குமரினுளன்னேரம் [தான்
தலையைவிரித்து தரையில் புரண்டழுதாள்
கூந்தலைவிரித்து கோவென் றழுதுநின்ருள்
வச்சிரமிழைத்த அவள்வாளி தெறித்துவிழ

முத்தாலிழைத்த அவள்மூக்குத்தி அற்றுவிழ
பர்த்தாவை நினைத்து பரதவித்தா ளன்னேரம்
கணவனமேல் சிந்தையாய் கலங்கினு ளன்னேரம்
இந்தபடியாய் ரதிதேவி இனிபுலம்பும வேளையிலே

கூடவந்த தாதியர்கள் கூடியழுது நின்ருர்
மன்மதனெரிந்ததுவும் மங்கை புலம்புவதும்
சிவனுடைய அருகிருக்கும் தேவர்களத தான்பார்த்து
அபப்பாரதிதேவி ஆரணங்கு யேதுசொலவாள்

யென்கணவா மன்மதனேயிதுக்கோதான் பெண்பிறந்தேன்
அக்கினியில நீயெறிய அவர்கள்சொல கேட்டீரே
நீதியாயெரிய தேவர்கள சொலகேட்டீரோ
பெணசாதசொலலையென் துரையேபொறுக்காமல்போனீரே

மனையாட்டி சொல்லை என்காமகளஞ்சியமே மதியாமல்
[போனீரே
தான் குறுக்கே மதித்தேன் மாயன்மகனே கோவெனறழுத்த
சற்றுமாயாமல் யெனதுரையே தைரியமாய் வந்தீரே [வோ
தைரியமாய் வந்தீரே நீர் தணலாயெரியவோ தான

அக்கினியாய்வேகையிலே நான்பாவிசண்டாளி அருகிலிருக்க
யென்வயிற்றை யெரியுதே வயிறுபற்றிவேகுதிப்போ [லேயே
யென்கும்பி யெரியுதே யென்குடல்பற்றி வேகுதிப்போ
யென்மிரல் யெரியுதேயென் துரையே இருதயமும் வாடுதே
பற்றுதேயென்னங்கம் யென் துரையே பந்தத்து நெய் யது
உருகுதே யென்னங்கம் ஓமத்து நெய்யதுபோல் [போல்
வெந்த உடம்படியோ யெனக்கு வெறகுவெந்த செல்லாது
கனிந்தஉடம்படிம்யா யென்தொழிகட்டை வெத்தசெல்லாது

மங்கையெனக்கு இந்தவையகமும் மயங்குதடி
இங்கிருக்க யெள்ளளவும் சிந்தையில்லை
மன்மதரைப்பார்க்க மனக்கவலையாகுதடி
ஆயன் வயிற்றில் அவதாரம் செய்தீரே
மாயன்வயிற்றில் வந்துதித்த மன்மதரே

யென்னைமாலையிட்ட நாள் முதலாய் மாதாமனையறியேன்
யெனனை தாலிகட்டின நாள முதலாய் தாயார்மனையறியேன்
அண்ணன் தம்பியெனக்கு அறியபிறவியற்றேன்
ஆருமற்ற பாவியெனக் காதாரமில்லை ஒன்றும்
நானசலுகையற்றபாவி என்துரைய்ய சபையில் வந்தேன்
[தனியாக

நான் பேருபெற்ற பெண்சாதி பெருஞ்சபையில் வருவேனே
என் மன்னவரும் தேவியரும் மருவிவழி நடந்தாள்
யென்கொற்றவரும் தேவியரும் கூடிவழி நடந்தாள்
கொம்பிலிருக்கும் குயிலதுவும் தெண்டனிடும்
காமனுங் கன்னியும் கடுகிவழிநடந்தா ல்
கானகத்தில் தானிருக்கும் கருவண்டு தெண்டனிடும்
மரத்திலிருக்கும் மயிலதுவும் கூவிவிடும்
கண்டவர்கள யாவர்களும் களிப்படைந்து நிற்பார்கள்
இன்றுமரமேறும் பல்லிக்கியென் அழகுதுரை வார்த்தைகிட
[மாச்சே
செவரேறும் பல்லிக்கு எனக்கு சொல்லுகிட மாச்சே

பார்த்தவர்கள் யெல்லோர்க்கும் பனி ப்புச்சிடமாச்சே
இந்தபனிப்புச்சிடமாகி நான்பானி பாரிஷி நப்பதுண்டோ

மல்லிகை பூமுடித்துநான் மங்கை இருந்தி டவும்
யென் மல்லிகைப்பூ வாசனையை மன்னனரிந்திடுவர்

நான் சென்பகபூமுடித்து தேன் மொழியாள் வீற்றிருந்தால்
கொத்தலரிபூ முடித்துநான் கொம்பனையாள் வீற்றிருந்தால்
யென்கொத்தலரி வாசனையை யென்கொற்றவநும் தானரி
நான் புரளி பூமுடித்து அலரிநின்று வாடுகிறேன் (வார்

நான் பூமுடித்து வாழ்வமென்று புண்ணியனே யென்னனின
நான்பூடிக்க பொறுக்காமல் நீபோன இடந்தெரியலேயே(னே
எறும்புருவம் யென் துரையே மன்மதனே உழுதிட்ட திரு
(நாமம்
கூரும் புருவம் கோபாலன் மகனே கொழுந்திட்ட திருநாமம்

உஒகண்க ளிரண்டுக்கும் கருவண்டு ஒப்பிடலா ம்
நெத்தி திருநாமம் நெடுமாலும் அதிசயிப்பார்
ஒன்டல்லு ஒளிவுக்கு பார்த்திபன் மயங்கிடுவான்
ஒன்கழுத்தி னழகைக் கண்டவர்கள் கருதிடுவார்

ஒன்மார்பு திருவழகை மண்டலத்தில் கண்டதில்லை
கையழகும் காலழகும் யென கண்ணை விட்டு போகவில்லையே
ஒன்சிற்றிடை அழகைக் கண்டால் தேவர்களு மஞ்சிடுவார்
ஒந்தன் அழகைப்போல் ஒருவரில்லை வையகத்தில்

ஓம்மாம நான் காணமல் உயிரோடிருப் பேனா
பத்து மாதம் சுமந்தெடுத்தென்னை பாதகியால் பெற்றதுவும்
நான் தத்தடி யிட்டதுவு மென்தாயார் வளர்த்ததுவும்
வெளியிலே விட்டாக்கால் யெனமேனி கருத்துமென்று

காணலிலே விட்டாக்கால் கருகிடுமேனி யென்றும்
தோள்மேலெனை வளர்த்து குடைமேல் நடைபழக்கி
மார்மேலும் தோள்மேலும் வன்னமடிமேலு ம்
விளக்கெதிரே தான் போனால் மேனிகருகுமேன் று

மாணிக்க கல்பதித்து வளர்த்தாள் யென் தாயாரும்
அன்றுகட்கு கொடுத்ததென்ன அன்று கண்ணுலெரித்த
[தென்ன

நான் யாருடனே சொல்லி ஆற்றிடுவேன் யென்குறையை
யின்று யெனக்கு தேறுதல்சொல்லி எனக்கு திடம் சொல்
[வாருருவரில்லை

மாயன்மகனுரே யெனக்கு மைத்துனராய் வந்தீரே
கோவிந்தன் மகனுரே யென்னைகூடி அனைந்தவரே

பொழுதோடி போகுதே என்துரையே ஒன்பொன் முகத்
[தைத்தேடுதே

நாளோடி போகுதே நல்லமுகம் தேடுதிப்போ
நிலவல்லோ மறையுது ஒம்முடைய நீலமுகம் தேடுதிப்போ

பெர்முதை சரியிடுவேன் பொன்வண்டு கொப்பிடுவேன்
நானை சரியிடுவேன் நல்லவணடுக் கொப்பிடுவேன்

ஒப்படுவேன் ஒப்பிடுவேன் ஒருதைபிறைக்கே ஒப்பிடுவேன்
நான் ஒப்பிட்டமுதாலும் யெனக்குறுதி சொல்வார யாரு
[மில்லை

நான் ஒப்பிட்டமுவமென்றால் என்குறை கேட்பாருருவ
[ரில்லை

யின்று ஒப்பிட்ட பெண்ரதியும் வந்து ஒங்களுடன் சேர்வ
[தில்லை

ஒம்முடைய நடுநெத்தி திருவழகு நாலாம்பிறையது போல்
மூக்கு திருவழகும் என் காமகளஞ்சியமே முத்துபதித்தது
[போல்

கண்புருவம்கொண்டு மென் துரையே உனக்கு கருவன்டை
[ஒப்பிடலாம்

கூரும்புருவம்ரெண்டும் கோதில்லா வில்லதுபோல்
நீர்கின்ளிட்ட திருநாமம் கிளியிருந்து கொஞ்சுதிப்போ

நீர் அள்ளியிட்டத் திருநாமத் தல்குக்கிளையே து
நான் போகவேணுடுமென்று புலம்பி தவித்தே ஏன்

இதுசத்துருவாயிருகுதென்றேன்சாமியே நான்சொன்னே
[னே

இது மோசம்பயணமென்று நான்பாவி முன்பாகசொன்னே
மடிப்புலவரும் யென்று மன்மதரே சொன்னேனே (னே

யென்பாவியுட வாய்சொல்லை யென்துரையே நீரும்பாராமல்
(வந்தீரே

சற்றுமறியாமல் யென் துரையே நீர் சந்தோஷமாய் போனீர்

ஆதிசிவனாமிருப்போ அதிகோபந் தானாகி
அக்கினி கண்ணாலே உம்மை அனலா யெரித்தாரே

உங்கள் வேகம் அடங்கிற்றே வெந்து கனலானீரே
வெந்து தனிந்தீரே வெளிப்பட்டு போனீரே

சிங்கத்தின் கன்றே யென் துரையே கிட்டாததென்னமுதே
அங்கத்தின் மேலே அணிந்த திருநாமம்

மங்கையர்கள் கண்டு மதிமயங்கி நிற்பார்கள்
பங்கபடுத்தி விட்டார் பரமசிவன் தப்பாமல்

புங்கவனேயென்துரையே ஒன்திரேகம்புழுதியடைந்ததுவே
அன்றுபோக வேண்டாமென்று புலம்பிதவித்தேனே

நான் ஒக்க வருவேனென் றுரைத்தேனே உந்தனுக்கு

நான் வருவேன் வருவேனென்று வழிமறித்து நின்றேனே

நான் காணாத சொற்பனங்கள் பாவிகாணுதென்று சொன்
(னேனே

காரணமாயிருக்குதென்று யென் காதலனே சொன்னேனே

நீர்போனவிடம் பார்த்து நான்பாவி புலம்பியழுதிருந்தேன்
தானே புலம்பி மகிட துரைச்சியவள் தயங்கினாளன்னேரம்

ஒம்மைவிட்டு நானும் ஒருநாள் பிரிந்ததில்லை
யென்னைவிட்டுநீரும் மிருந்ததுண்டோ யிப்பொழுதும்

யின்றுபிரியயென்னரசே யேதுவுண்டோ யெப்பொழுதும்
சீனிகரும்பேஎன்பச்சைபசுங்கிளியேதெகட்டாதசெந்தேனே

ஆனிகனகமே அங்கஜவேக்துரையே ஆபரண ஆனிமுத்தே
கோமேதகமே மாயவனார் பெற்ற குளிர்மதியே கோகிலமே

ஆருக்கும்நல்லவரே என்துரையே மன்மதரே அருமையற்ந்
(தவரே

எவருக்கும் நல்லவரே என்சாமிமன்மதரே எழிலான என்
சீருள்ளபெண்ணரசே சிலைகரும்பு கையோனே [துரையே
பாருக்குள் நல்லவரேஎன்பிராணநாதா பரமனிடம்வந்கீரே
பூசைக்கு கந்த புண்ணியனே என் துரையே பொய்சொல்லா
எங்களுக்கு ஏற்றதொரு யெழிலான மன்மத-னே [வாசகனே
பெண்களுக்கு நாயகனே பேர்பெரிய மன்மதனே
அழகில்மிகுந்தமன்மதராஜ துரையே அன்புள்ள யென்சாமி

உன்னை நம்பி இருந்தயென்னை நடுத்தெருவில் விட்டீரே
என்னை தனியவைத்து என் துரையேநீரெமலோக சேர்ந்தீரே

நீர்வருவீர்வருவீரென்று நான்பாவிசண்டாளிவழி 'ர்த்திரு
[ந்தேனே
நான்குறிபார்த்தநெல்லு ஒரு கோபுரத்தை போலாம்

திரும்புவீரென்றுயென்னுசை துரையேநான திசைபார்த்திரு
[ந்தேனே
வாரிதெளித்ததுபோல் உனக்கு வரணச்சிறுதேமல்
மொண்டு தெளித்ததுபோல் உமக்கு முகத்தில் சிறுதேமல்

தேமல்படர்ந்தது நமக்கு தேவலா மென்றிருந்தேன்
வடிவான தேமலென்று நாம் வாழலாமென்றிருந்தேன்

வேமல்படர்ந்தது யென்சாமி மன்மதற்கு தீம்புவந்தகாரண
[மேன்
வைகைநதியாடயென் காமதுரையே வருவதுமெப்பொழுது
படுக்கையில் முளைத்தமரம் யென்சாமீ பக்கம் வேராற்றமரம்

இன்றுபக்கம் வேரற்ற பச்சைதிருமேனி பழுதுவந்தகாரண
[மேன்

குளத்தில் முளைத்தமரம் என்காமதுரையே நான்கூட்டுரவற்ற
மின்று கூட்டுரவற்ற கொடும்பாவி நானுனே ன் [மரம்

யென் எண்ணமெல்லாம் பொய்யாச்சியேளிகமே மெய்யாச்சி
மன்னவனே யென்கணவா யென்னைமயங்கவைத்துபோனீரே

என்நாகரத்தினமுத்தே என்னுசைகிளை நற்பவழகோருவை
[யே
நீர்சாகவயதோ என்சாமிமன்மதரேகாஞ்சிருக்கநாளிதுவோ

நீர்வேகவயதோ யென்காம கனஞ்சியமேவோரக
[நாளிதுவோ

நீ போகவயதோளன் புண்ணியராஜதுரைபோய்
[மாளநாளிதுவோ
சாகநானானதென்று என்சாமிமன்மதரே சாம்ப
[லாய்போநீரே
ஓம்மைவைத்து போவேனென்று உறுதியாய்நா
[னிருந்தேன்
யென்னைவைத்துநீர்போகயேற்குமோவைகத்தில்
யென்றைக்கும்நான்காண்பேன் யென்ஜெகமணி
[விளக்கே
மடியீல் ஜபமாலை யென்துரையே மண்டலத்தில்
[பூமாலை
கையில்ஜபமாலை அத்தைமகனே பக்கதில் பூமாலை
பக்கம் கணக்குதென்று என்மாமன்மகனே கை
[விட்டிரெந்தனேயும்
போனவர்கள் போதுமென்றேன் ஒம்முடைய
[பொன்முகம்வேணுமென்றேன்
மாண்டவர்கள் போது மென்றேன் எந்தன் மன்
[மதனே வேணுமென்றேன்
பொழுதுவிடியளிலே பொன்னுநதேர் கொள்ளே
[யென்றேன்
வெள்ளிமுளைக்கையிலேவெங்கலத்தேர்கொள்
[ளேயென்றேன்
வாசல்நிழல்சாயுமுன்னேவச்சிரத்தேர்கொளளே
[யென்றேன்
கூரைநிழல்சாயுமுன்னேயென்துரையேகுளிர்நத
[முகமதேடுகிறேனே
அந்திநிழல் சாயுமுன்னே ஆளழகா மன்மதரே
[அமந்தமுகமதேடுது
தேசமெங்கும் தேடினலும்யென்துரையே ஒம்மு
[டைய திருமுகத்தைக்காண்பதெப்போ
உலகெங்கும் தேடினலும ஓம்முடைய உத்தம
[முகம காண்பதெப்போ
எங்கே என்று தேடுவேன என்சாமிநீருமயிருந
(தாலே போருந்த
போ நீரேஎன்னைவிட்டு யென் பூசைக்கிசைநத
[புண்ணியரைப்போலவருமோ

பாடுபட்டேன் ஒன்னுலேநான் பாவிசண்டாளி
(படுத்தா துரக்கமில்லே
கேடுவரும்போது மதிகெட்டுவரும் தப்பாமல்
விதியை நினைத்தால் விசாரமுண்டோ யெந்தனுக்கு
மார்பில நிறைந்தவயிரபதக்கம் பொன்னுலே
தோளில் நிறைந்ததொரு தோள்வாங்கி பொன்
கையில் நிறைந்தகணையாழி பொன்னுலே (னுலே
வீசிவரும் கைகளுக்கு மின்னல்போல் கையாலே
ஆடிவரும் கால்களுக்கு அசைந்து வரும் பொற்சிலம்பு
தண்டைசிலம்புகளும்தான நிறைந்தபனிதிகளும்
இந்திரவர்ணபட்டுஎழுலெட்சம பொன்பெருமே
மாமனுக்குபச்சைவடம மாமியற்குபொன்னுடை
கோலவைக்காய் போலேகோத்தமுத்துதாவடமும்
பாவக்காய்போலே பவழமணி தாவடமும்
அவ்விக்காய்போலெனக்கு அனந்தமுடிச்சிகளும்
சரமாக யெனக்கு சந்திரமாலைத் தாவடமும்
முத்திழைத்த ரதநனமும மோகனமாலைகளும்
ஒத்தைசரடுகளும ஒளிவுள்ள முருகுகளும
ரெட்டைசரடுகளும நெரிஞ்சிப்பு நேரமணியும்
இத்தனையும கொண்டுவந்தார் யெனமாமன
[கோபாலன்
எனக்குஎழுவதுகோடிபவுன் இயல்பாகத்தான்
(கொடுத்தார்
தெட்சினத்தில்கெவுளியதுஉச்சிதாயசொன்னது
அஷ்டமிட்ட கெருடன் வட்டமிட்டு நின்றதுவும் [வும்
நல்லநக்ஷத்திரமும நலமான நாளாக்கட்டு
முகூர்த்தமதுல தாலிகட்டி முச்சூடும் வாழுயிலே
யஞ்சவ நிராடி மருவி இருக்காமல
சோபபானாடி சுகமாயிருக்காமல் [தெப்போ
படுக்கும அரமனையில பனளிகொவளவார
வந்தவழி தத்துவலகம்மாபம வந்ததுவே
தங்கனிவனி யலலலாருமதடியிட்டமங்கிலிய ம்
தொட்டிட்ட மங்கிலியம் துலங்குமெனறு நானி
(ருந்தேன்
முகூர்த்தமதில்தாலிகட்டிமுச்சூடும்வாழலை யே

மஞ்சள் நீராடி மருவி விளையாடாமல்
சேரப்பாவிலாடி சொருசாயிருக்காமல் [போ
படுக்கும் அறைதனிலே பள்ளிகொள்ளவாரகெப்
வந்தவற்கு இந்தவகைமோசம் வந்ததென் ன
அன்றுகட்டிகொடுத்ததென்ன இன்று கண்ணுலெரித்த
[மதன்ன
அதற்குள்ளேசிவன்இருபை அமளிவந்துநேர்க்த
[தென்ன
முத்துமுடி குலுங்க யெனக்குபுத்தி சொல்லவார
[தெப்போ
நீங்கள் வாரியுண்ட அன்னத்தில் நான்மண்ணை
கலந்ததுண்டோ) [துண்டோ
நீங்கள் கலந்துண்ட பொசிப்பில் கல்லைக்கலந்த
சுற்றத்தாருடன்கூடி நான்பாவிசூதுவிளைந்த
[துண்டோ
பாவியுடன்கூடி பகைத்ததுண்டோ ஒங்களையும்
யென்னைத்தனியவைத்து நீர்யெமலோகம்சேர்ந்
[தீரே
கன்னியைதனியவிட்டு நீர்கைலாசம் சேர்ந்தீரே
செவளுமிடிந்துவிழ யென்சாமி சித்திரமோ அத்துவிழ
மரமோமுறிந்துவிழ யென் துரையே இப்போ
[மாமரமோயித்துவிழ
பூவோமனங்குறைய பூமரமோயித்துவிழ [நான்
அப்போதடித்துபுலம்பி ஆதிசிவன் முன்னேவந்
யென்னகுற்றம் செய்தோமென்றுயெரித்தீரேமன்
பிட்டுக்குமண்சுமந்துபிரம்படியும்பட்டீரே [மதரே
கல்லடியும் வில்லடியும் கனமா படவில்லையா
அப்படிக்கு மன்மதரு மடித்ததுண்டோ ஒருத்தனையும்
அப்போது யென்தகப்பா அக்கினிகண் யெங்கே
[யோதான்
மார்க்கண்டனுக்கு வயது பதினாறு கொடுத்தீர்
அவர்பூக்குடலை கையெடுத்து ஒம்மை புசிக்கவந்ததினால்
அவருக்கென்றும் பதினாரெடுத்துரைத்தீ ரேன்
(தகப்பா
வில்லாலடித்தானே விஜயனவன்பாத்திபனும்
அப்போது இந்த அக்கினிக்கண் இல்லையா

அவர்களைப்போலென்புருஷ னும்மை அடித்த
[துண்டாசொல்வீரே
அயிந்துவித புஷ்பத்தா லும்மை அர்சித்தாயென்
[புருஷன்
சப்தாமலரெடுத்து சாற்றினாரென்புருஷ ன்
அவர்யென்னகுற் றம்செய்தாரென்றெரித்தீரோ
(மன்மதனை
அவர்யென்ன குற்றம்செய்தாரோயென்பழியை
[யேற்றிடுவீர்
வீணாக இவ்வுலகில் வினைநத்தும் செய்தா ரோ
தெய்வசிறையை மன்மதராஜன் திரமாயிழுத்த
[துண்டோ
வானவர் சிறையை மருவி யிழுத்ததுண்டோ
ஆரோக்கியபுறத்திலமர்ந்திருந்த மன்மதரை
தூதர்களை விட்டு துருசாய் அழைத்ததுவும்
மன்றாடிகொண்டுவந்துவகைமோசம்செய்தீர்கள்
காமனை அழைத்துவந்து கணவா யெரித்தீரே
இந்தஅநியாயம்செய்ய அடுக்குமோஉங்களுக்கு
மருமகனென்று சொல்லி மனதிறங்கிப்பாராமல்
சற்றும் இறங்காமல் தணலா யெரித்தீரே
யென்ன மதியாலே யெரித்தீர்காண் மன்மதரை
பித்துபிடித்ததோ யென்புருஷன் தனையெரிக்க
பெற்றமகளருந்துவிழ பொறுப்பாரோவையகத்
ஒன்மதிதானும்கெட்டுதோமன்மதனையெரிக்க(தில்
ஆலவிஷமுண் டிரு லரிவழிந்து போனீ ரோ
மாயவனுரென்மாமன்மகிழ்ந்திருந்துபார்த்தாரோ
அத்தை அலமேலும அகமகிழ்ந்துபார்த்தாளோ
அந்தகோபாலன் வம்மிஷத்தில் கொடுங்கபடு
(மெத்தவுண்டு
பெருமாள் வம்மிஷத்தில் பெருங்கபடுமெத்த
[வுண்டு
தன் னுடையபிள்ளையென்று சற்றும்வைத்துபா
காட்டிகொடுத்தார்கள் கடக்கப்போய்நின்றார்கள் [ராமல்
ஒப்பிகொடுத்தார்கள் ஒதுங்கிப்போய் நின்றார்கள்
நான்போகவேண்டாமென றுபுலம்பிதவித்தேனே
கேளாமல்போய் இணத்தில் விழுந்தாரே
இணத்தில் விழுந்தவரை கரையேற்றி வைப்பும் அகமா

நெருப்பாகயெரித்தவரேஎன்தகப்பாயீஸ்பரனே
[நீர்எழுப்பிதரவேணுமை
திருநீருய்போனவரைஆதிசிவனே திருஷ்டிகக
(வேணுமய்யா
பித்தநய்யா என்புருஷன் ஈஸ்பரனே நீருபிழை
[பொறுக்கவேணுமய்யா
கங்கைநதியாடநான்பாவிசண்டாளிஙளிமொழி
ஆற்றங்கரைக்கி நானருங்கினியாள் போகயிலே [போக
லைலைகநதியாடயிலேநானபாவி வாரிவிட்டேன்
(தர்மமதை
தீர்த்தநதி ஆடயிலேநான்பாவிசண்டாளிதீர்த்து
[விட்டேன் தர்மமதை
இப்போ தர்மமும்பொய்யாச்சி தலைவிதியுமெய்யாச்சு [விடும்
காலையுனமுகமபார்த்தாலே யென கவலைதீர்ந்து
அந்திமுகம்பார்த்தாலயென்துரையே அமுர்தமுண்டாம்
[போலிருக்கும்
தான்தேடித்திரிந்தாலும்என்ராஜதுரையேஉன்திருமுகத்தை
[காணபமுதப்பா
ஓடித்திரிந்தாலும் ஓம்முடையஉத்தமமுகம் காணபமுதப்பா
கணலுமேல கண்டவர்கள்காயகம்மேனியமேல் கலங்குவாராயி
[ரமபேர்
முன்னழகைகண்டவர்கன் மாயன்மகனே மோகிப்பாராயி
[ரமபேர்
பினனழகைகண்டவர்கள் என்காமகளஞ்சியமே
[பின்தொடர்வாராயிரமபேர்
மார்பழகைகண்டவர்கள் என காமதுரையே
[மயங்கிடுவாராயிரம்பேர்
தோளழகைகண்டவர்கள் யென கண்மணமத
[மேல் தொடர்வாராயிரமபேர்
முகத்தழகைகண்டவர்கள் யென்கண்வா யென
[துரையேமோகிப்பாராயிரமபேர
அழகுடனே வருவியெனறுநான பாவிசண்டாளி
[அம்மை கமாயெண்ணினேன
ஓம்முடைய வடிவழகைபார்ப்ப யெனமுமன
[மகிழுந்து நானிருந்தேன்
நீர்சாபுரிப்பாப்பலையில யென துரையேமணமதமேர
[நான தூங்கிவிட்டேனே

திரும்பிவருவீரென்று திருமால்மகனே திசை
(பார்த்து நானிருந்தேன்
யித்தபடியாரதிதேவி இனிப்புலம்பும்வேளையிலே
அம்புபட்டமானது போல்ரதிதேவி நாயகியாள்
(அலரிவிழுந்தழுதாளே
யிடிவிழுந்த நாகம்போல் ரதிதேவி நாயகியாள்
(ஏங்கிநாளன்னேரம்
அழகில்மிகுந்தவர்கள் ராஜதுரையே ஆகாது
(வையகத்தில்
யென்நாயகனை காணுமல் நல்லஉயிர் போகுதிப்
(போ
யென்மன்மதனை காணுமல் மதிமயக்கம்கொள்ளு
(திப்போ
யென் அரசுகிளிபோனவுடன் அவதிமெத்ததோ
(ஹ திப்போ
நான்யேதுகுற்றம்செய்தேனென்று யெமலோகம்
(சேர்த்தீரோ
யென்னை மருவியிருந்தவரே மாயவனர் தன் மகனே
யென்னைகூடியிருந்தவரேகோபாலன்தன்மகனே
யென்னைசேர்ந்துபிரிநதவனேசிவனுர் மருமகனே
யெங்கேஒருத்தீரோ யென்சாமி மன்மதனே
அடியாளை இங்கேவைத்து ஆளழகா யெங்கொ
(ளித்தீர்
அழுதாள் யெழுந்திருந்து ஆளழகன் முன்னே
(வந்தாள்
அன்றுகட்டிக் கொடுத்ததென்ன யின்றுகண்ணு
(லெரித்ததென்ன
யென்புருஷன் தனையிழந்து போவேனு யென்தக
(ப்பா
நான்மன்மதனை தானிழந்துமரப்பேனுயென்தகப்
(பா
யென்பர்த்தாவைதானிழந்து பாதவித்து நிற்ப
(னே
தாலிபறிகொடுத்த மகாபாவி யென்பாருலகி—லெ
மங்கிலியம்பறிகொடுத்தமகாபாவியெனபார்கள்
யென மனமதனை யெரித்த கண்ணு லென்னையும்
(யெரித்துவிடும்

யென்புருஷனையெரித்த கண்ணாலும் பெண்ணையு
[மெரித்துவிடும்
யென்வயித்தெரிச்சல்பட்டுநீர்வாடிமயங்கிடுவீர்
பெண்பழியும் வாராமலென் புருஷனை யெழுப்புமய்யா
யிந்தபடியாய்ரதிதேவிபியப்பலுற்றாளன்னேரம்
அப்போபரமசிவனருகில்பார்வதியைபார்த்தான்
[காண்
பார்வதியைக்கண்டவுடன் ரதிகிளியாள் பதறி
(அழுதாளே
தாயென்றுநானிருந்தேன்யென்தாயேயீ வைரியே
தயா நிதியடி
மாதா வென்றெண்ணினனே மாபாவிசண்டாளி
(மதிகேடியாநீயே
யென்பெற்றவளென்றிருந் தேன்பிழைவந்து
(நேர்ந்ததடி
உலகத்துபெண்களுக்குஉன்னைபோலதாயுமில்லை
பழிகாரி உன்முகத்தை பார்க்கெனக்கு நீதியுண்
(டோ
யென்புருஷனைக் கொன்றவள் நீஉன்பெண்ணையு
(மெரித்துவிடு
யிருவரையுங்கொன்றுவிட்டு யிருங்களடி நீசுகமாய்
அப்போதேவர்களைக் கண்டுதேன்மொழியாளேது
(சொல்வாள்
அனைவரையுங்கண்டு அருங்கிளியாளேது சொல்
(வாள்
நீங்கள் திரமாகவாத்தை சொல்லிதென்பாய்அழைத்துவந்து
தென்பா அழைத்து வந்து தீயபாயெரித்து
(வைத்தீர்
நான் சிந்தைகலங்குவது ஒங்களுக்கு தீயபார்முடி
(யாதோ
தான்மங்கை கலங்குவது ஒங்கள் மனதிலிடிக்காதோ
புண்ணயவர் பழியேறநீர பெண்பழியை வாங்குமென்றுன்
வருந்தி அழைத்துவந்த மடிப்பாகக்கொன்றீர
இப்போது தான் வந்தேன் யென்பழியை வாங்குமெனுள்
இந்தபடியா ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போது பாரவதியும் ஆத்திரமா ஓடிவந்து
வாரியெடுத்து ரதிகிளியை மார்புடணைத்தாளே
தூக்கியெடுத்துதிரேகமெல்லாம்தான் துடைத்து

உனக்கென்னகுறைச்சலடியென்குழந்தைநாயகி
நீஒன்றுக்கு அஞ்சாதே உத்தமியே யென்மகனே
நீ ஆங்காரத்தாலே அழுதால் வருவா—ரோ
கோபத்தினாலேபெண்மயிலேஎன்மகளேகோ
(வென்றழுகாதே
புலம்பினதினாலே என்மகளே உத்தமியேஒன்புரு
(ஷன் வருவாரோ
நீ அழுததினாலே அன்னகிளியாளே ஒன் அரசன்வருவாரோ
ஆதிசிவனிடததில நீ அபயமிட்டழுது நின்றனே
மனமிரங்கும் படியாய் மங்கையரே சேதி
(சொன்னன்
ஒன்புருஷனை யெழுப்பிடுவார் பெண்ணரசே பொறுத்திடுயா
இநதபடியாய் ரதிதேவிநாயகியும யிருக்குமநத
[வேளையிலே
அப்பொழுது ரதியாளும் ஆரணங்குயே துசொல்
ஆதிசிவனிடத்துலன்பாகப்பாயினின—று[வான்
அப்பொழுதுதேவர்களுமானிடத்தில்வநதார்கள்
மூக்கண்படைத்த மூர்த்தியே போற்றியென்றார்
யெல்லோரும கூடியெது சொல்வார் யீஸ்பரத்து
மான மழுவை தரித்த மகாதேவா தஞ்சமய்யா
காளைவாகன பெருமா கடவுளே தஞ்சமய்யா
மாட்டுமேலேறி வரும மகாதேவா தஞ்சமய்யா
யெமனை உதைத்த யீஸ்பரனே தஞ்சமய்யா
உமமைவிட தெய்வம உலகத்தில வேறே இல்லை
ஆலகையினாலே அன்பாக சொலலுகுறோம
காமன செயல போ ஜல் கைநதவரை தெரியவதுண்
உலகம பெருகவைக்கும உததமனே மனமதனும (டோ
மனமத நலலாமல மாலினமை பெருகும்மோதான
ஆலசயெனற மனமத நாராகும அனமை—து
ரதிதேவி கலக்கமலத நாதனே திருமயயா
அவள கலக்கமனத திருமயயா கயிலாசமூர்த்தியென்றார்
அப்பொழுது ரதிதேவி ஆரணங்கு தேப்து சொல
யெததன புருஷனையே யெரித்த ஈஸபரனே (வாசன்
கொஞ்சமாவது யெனமேல் கோபமதை தீராத
யெது யாரியானாலை இனமைக சிறுமயது [தீர்
தாலுகு ரணை கொப்பததுணை தோடா உஙகள ரதிதேவி
[நாயகியும

வயதாச்சேசாயெந்தனுக்கு வையாகத்தில் நான்
கொஞ்சவயாசிலன் கொற்றவரை காநெரித்தீர்
காய்க்கும் பிருயத்தில் கணவனை பறிகொடுத்தேன்
பூக்கும் பிருயத்தில் புருஷனை பறிகொடுத்தேன்
போது மய்யா இந்த மட்டும் யென் புருஷனை
[யெழுப்புமைய்யா
அப்போது யீஸ்பரர் அன்பாகயேது சொல்வார்
மன்மதனை யெரித்தேனென்று மனஸ்தாபம் படுகாதே
மாயன் குலத்தினிலே மாண்டவர்கள் வந்த
[துண்டோ
ஆயன் குலத்தில் அழிந்தவர்கள் வந்ததுண்டோ
திருமாள் குலத்தில் செத்தவர்கள் வந்ததுண்டோ
இப்போயெழுப்புகிரேன் யென்மகளே நீகேளும்
செத்தவர்கள் வந்தாலே சிறப்பாருலகமதில்
மாண்டவர்கள் வந்தாலே வையகமும் தாங்காதே
சாப்பலாய் போனவனும் தான் பிழைத்தானென்
[ருர்கள்
யென் மேலே குற்றமில்லை யெம்பெருமாள் செய்த
[குற்றம்
நளராஜனைக்கொன்று நடுகளத்தீர்த்தலையத்தீர்
யிறணியனைக்கொன்று இடச்சியையும் கைபிடித்
தன் பிள்ளை யென்று சற்றும் வைத்துப்பாராமல் [தார்
யென்மேலே குற்றமில்லையென்று சொன்னாரீஸ்
[பாரும்
யீஸ்பரரை பார்த்து யேது சொல்வாளன்னேரப்
சிவனே உன் தஞ்சமென்று சிந்தைகலங்கலுற்றாள்
அரனே உன் தஞ்சமென்று அபயமிட்டேது சொல்
சிறுளனை கொன்று திரும்பி உயிரளித்தீர் [வாள்
பிள்ளையை அருத்துண்டு பின்னே யெழுப்பிநீரே
யிப்போ யெழுப்புமய்யா யென் புருஷன் மன்மதனை
யேழைபங்காளா யென் புருஷனை யெழுப்புமய்யா
ஆதிமுதற்பொருளே அரனேரதஞ்சமென்று ள்
அப்போது ஆதிசிவன் மகளுக்கு ஆதரவு சொன்
(னார் காண்
பெருமாள் தனக்கினி உன் புருஷனையும் தெரியாது
உனக்கு தெரியுமடி உன் புருஷனடையாளம்

ஒன்புருஷனும் நீயும்பிரியாமல்வாழ்ந்திருப்பாய்
வைபோகமாக மகிழ்ச்சியாய் வாழ்ந்திருப்பாய்
சங்கரனைப்போது சாப்பலைத் தான்குவித்து
தெண்டாயுகத்தாலே இஷ்ட்டித்தார் மன்மதரை
தண்ணீர்தெளித்துஜல்தியில் யெழுப்பிவிட்டார்
பொற்பிரம்பினைல் தட்ட பிழைத்தாரே மன்மத
வாய்வுபகவான் போல் வடிவரனர் மன்மதரும் (னும்
புலம்பின ரதிதேவி புருஷனைக் கண்டாளே
சந்தோஷமாக தன்ககப்பனை தெண்டனிட்டாள்
அப்போது தேவர்கள் அரனிடத்திலோடி
[வந்தார்
முப்பத்திமுக்கோடி முனிவர்கள் போற்றி செய்
அப்போரதிதேவி ஆானங்குயேது சொல்வாள்
என்தகப்பா யீஸ்பரனே உன் புருஷன் பேரு
[பெற்றூர்
புகழ்பெற்றமன்மதன் கதையை பூலோக மானி
வருஷமொருக்கால் மன்மதனே உண்டுபண்ணி [டர்கள்
பதினைந்துநாளை வரைபண்டிகையும்கொண்டாடி
தேங்காயிளநீரவலும் சீனிபரா கற்கண்டும்
பலகாரம் நீர்மோரும் பயர்கடலைதான்படைத்து
அனங்கனுட பண்டிகையை அன்பாய் கொண்
[டாடினர்
மக்கள் உறவினர்கள்மகிழ்ச்சியாய் வாழ்ந்திருப்
மாய்த்தவர் பெருவாழ்வு மானிலத்தில் தா[illegible]பெருகும் (பார்
அவரவர்கள் நினைத்தவரம் அரனாரே நீர்கொடுப்
அந்தபடியே அரசன் கொடுக்க அருளடைந்தாள் [பீர்
பெற்றவரங்களினல் பிரியம வைந்தாள் ரதியும்
மன்மதனும் தானும் மகிழ்ச்சியாய் வாழ்ந்திருந்தார்
கேட்டவர்களெல்லோரும்டுகினைபோலவாழ்ந்தி
((டுவார்
ஆல்போல் தழைத்து அரசுபோல் வேரோடி
மூங்கில்போல்சுற்றிமுறியாமல்வாழ்ந்திருப்பார்
ஆதிசிதளருளால் அனைவர்களும் தான் வாழி
வாழிவாழியென்று வாழ்த்தினேம் உலகமதை

மன்மதன் பூர்வகதை முற்றிற்று.

சீனிவாச அச்சகம், சூளை, சென்னை-600007.